Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆனி – 01 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ அவ்வல் 07 (15.06.2005) புதன்கிழமை இதழ்:259

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்

சகல நிகழ்வுகளுக்கும் ராசியான

ஸ்தாபனம்

மகாராசி சில்க்ஸ்



59, நவீன சந்தை உட்புறம்,

யாழ்ப்பாணம்.

T.P – 0777 286247.

# பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி.பி. பிரமாண்ட பேரணி!





கொழும்பு—

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி.பி. நேற்று கொழும்பில் பிரமாண்டமான பேரணியை நடத்தியது.

பொறளை கம்பல் மைதானத்தில் நேற்று பிற்பகல் இரண்டு மணியளவில் ஜே.வி.பி. தலைவர் மோசவன்ச அமரசிங்க இந்த எதிர்ப்புப் பேரணியைத் தொடக்கி வைத்தபோதிலும் அவர் இதில் பங்கேற்கவில்லை.

மருதானைச் சந்தி, வீனஸ் வீதி ஊடாக கொழும்பு நகர சபை மைதானத்தை பேரணி சென்றடைந்ததையடுத்து, லிப்டன் சுற்றுவட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஜே.வி.பி. பிரசாரச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான விமல் வீரவன்ச இந்த ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

ஜே.வி.பியின் பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இதில் பங்கேற்றனர். அரசுக்கு எதிராகவும், பொதுக்கட்டமைப்புக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கோஷங்களை எழுப்பினர். (12 ஆம் பக்கம் பார்க்க)



# பொதுக்கட்டமைப்பை விரைவுபடுத்த உதவி வழங்கும் நாடுகள் அழுத்தம்!

கொழும்பு—

வடக்கு – கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்நிர்மாண உதவிகள் சென்றடைவதாகவும் – அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நம்பிக்கையை கட்டியெழுப்பவும், பொதுக்கட்டமைப்பை விரைவாக உருவாக்குமாறு இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத்தலைவர்கள் விடுத்த கூட்டறிக்கையில் வற்புறுத்திக் கேட்டுள்ளனர்.

வொஷிங்ரனில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இணைத் தலைவர்களின் மாநாட்டில் இலங்கை நிலவரம் தொடர்பாக ஆராய்ந்து எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து வெளியிடப்பட்ட இந்தக் கூட்டறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது –

யுத்தநிறுத்த உடன்பாட்டில் குறிப்பிட்டிருப்பதைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## குழப்பங்களை கட்டுப்படுத்த கொழும்பில் 2000 பொலிஸார்!

கொழும்பு—

சமாதான முயற்சியைக் குழப்பும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபடுவோரை தடுப்பதற்காக மேலதிகமாக இரண்டாயிரம் பொலிஸார் கொழும்பில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கொழும்புப் பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது –

சமாதான செயற்பாட்டை குழப்பும் வகையிலான (12 ஆம் பக்கம் பார்க்க)

விகள் சென்றடைவதாகவும் – அரசுக் கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையி லான நம்பிக்கையை கட்டியெழுப்பவும், பொதுக்கட்டமைப்பை விரைவாக உரு வாக்குமாறு இலங்கைக்கு உதவி வழங் கும் நாடுகளின் இணைத்தலைவர்கள் விடுத்த கூட்டறிக்கையில் வற்புறுத்திக்

டில் இலங்கை நிலவரம் தொடர்பாக ஆராய்ந்து எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து வெளியிடப்பட்ட இந்தக் கூட்ட றிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப் பதாவது –

யுத்தநிறுத்த உடன்பாட்டில் குறிப்பிட் டிருப்பதைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் 2000 பொலிஸார்!

கொழும்பு—

சமாதான முயற்சியைக் குழப் பும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபடுவோரை தடுப்பதற்காக மேல திகமாக இரண்டாயிரம் பொலிஸார் கொழும்பில் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாக கொழும்புப் பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி பூஜித ஜய சுந்தர தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது –

சமாதான செயற்பாட்டை குழப்பும் வகையிலான (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிக்கு ஐ.தே.க. ஆதரவளிக்காது!

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு—

பொதுக்கட்டமைப்பு விவகாரத் தால் அரசாங்கத்திலிருந்து வெளியே றப்போவதாகக் கூறும் ஜே.வி.பியின் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிக்கு ஐ.தே.க. ஒருபோதும் ஆதரவளிக்காது என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித் தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது –

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாதோரின்சூட்டில் கடற்படைச்சிப்பாய் படுகாயம்!

### மன்னாரில் சம்பவம்

மன்னார் —

தலைமன்னார் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் மீது இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிர யோகத்தில் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுக் காலை 6.40மணிக்கு நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் எம்.ஜே. ஜெயலத் (வயது25) என்ற கடற்படைச் சிப்பாயே படுகாயமடைந்தவராவார்.

தலைமன்னார் கடற்படை முகாமிலிருந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு குறித்த பிரசாரத்தை வெள்ளியன்று அரசாங்கம் ஆரம்பிக்கும்!

கொழும்பு—

சுனாமி நிவாரண சபை குறித்து பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தும் பிரசாரநடவடிக்கைகள் – எதிர்வரும் வெள்ளிக்கிழமை சிறிலங்கா சுதந் திரக் கட்சியின் தலைமையில் ஆரம் பிக்கப்படவுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத் திரிபால சிறிசேன தெரிவித்துள் ளார். இந்த நடவடிக்கை குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது –

விடுதலைப்புலிகள் கேட்கும் அனைத்தையும் வழங்க நாம் தயா ரில்லை, அவ்வாறு வழங்கவும் மாட் டோம். அரசின் தலைவி என்ற வகை யில் ஜனாதிபதி மக்களின் தேவை களையறிந்து அவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப செயற்படுவார்.

மக்களின் விருப்பங்களுக்கேற் பவே அவர் சகல விடயங்களையும் முன்னெடுப்பார். இந்த நிலைப்பாட்டி லேயே ஜனாதிபதி உள்ளார். இது குறித்து இறுதித்தீர்மானம் எடுக்கும் வரை எம்மால் எதனையும் கூறமுடி யாது.

சுனாமி நிவாரணசபை குறித்து பொதுமக்களுக்கு விளக்கமளிக்கும் செயற்பாடுகளை இவ்வாரம் முதல் ஆரம்பிக்கவுள்ளோம். இன்று கொழும் பிலும் அதனை அண்டிய பிரதேசங்க ளிலும் துண்டுப்பிரசுரங்களை விநி யோகித்து பொதுமக்களுக்கு அறிவு றுத்தும் செயற்பாட்டை ஆரம்பிக்க வுள்ளோம்.

நாளைய தினம் கண்டி நகரில் 'மாநாட்டைப் பாதுகாக்கும் பொதுக் கூட்டம்' எனும் தொனிப்பொருளில் ஜனாதிபதி தலைமையில் கூட்ட மொன்று இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்பத்தில் மகாசங்கத்தைச்சேர்ந்த 1000 பிக்குகளை அழைத்து பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக விளக்க மளிக்கவுள்ளோம்.

சனி,ஞாயிறு தினங்களில் சகல மாவட்டங்களிலுமுள்ள அரச நிறுவ னங்களில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜாதிக ஹெல உறுமய உடைந்து சிஹல உறுமய உருவாகின்றது!

கொழும்பு—

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நடவடிக்கைகளில் அதிருப்தி அடைந் துள்ள ஒரு பிரிவினர் மீண்டும் சிஹல உறுமயவைத் தொடங்க முடிவு செய் துள்ளனர்.

சரத் மனமேந்திரா தலைமையில் சிஹல உறுமய மீண்டும் உருவாக வுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. கடந்த தேர்தலின் போது மகாசங்கம் கேட்டுக்கொண்ட தன் பேரில், சிஹல உறுமய – ஜாதிக ஹெல உறு மயவுடன் இணைந்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)


ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
EXPOAIR
021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1
Your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...


# அரியாலை மத்தி பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம்—

அரியாலை மத்தி கிராமத்தினை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக அந்தக் கிராம மக்களினால் கிராம அபிவிருத்திக் குழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி மக்களது அத்தியாவசிய தேவைகளையும், பிரச்சினைகளையும் இனங்கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கேற்ற திட்டங்களைத் தயாரித்து பொருத்தமான அமைப்புகளுக்கூடாக அவற்றை நிறைவேற்ற இந்தக் குழு நடவடிக்கை எடுத்துவருகிறது.

அந்தவகையில், கடந்த 30 வருடகாலங்களுக்கும் மேலாக புனரமைக்கப்படாதிருக்கும் அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோவில் ஒழுங்கை மற்றும் சாத்திரியார் ஒழுங்கை ஆகியவற்றை புனரமைப்பதற்கான திட்டங்களையும், பல வருடங்களாக சீரமைக்கப்படாதிருக்கும் திருமகள் வீதி வடிகால், இலந்தைக்குளம் வாய்க்கால், திருமகள் வீதி, கனகரட்ணம் வீதிச் சந்தியிலுள்ள மதகு புனரமைத்தல் போன்ற திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்த அரியாலை - திருமகள் பாலர் பாடசாலையை மீள நிர்மாணித்தல், திருமகள் சனசமூக நிலைய கலையரங்கை சீரமைத்தல், இந்தச் சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்டுவரும் பாலர் பாடசாலைக்கான மலசலகூடம் அமைத்தல், அருணோதயா சனசமூகநிலையக் கட்டடம் அதனோடு இணைந்த கலையரங்கு கட்டடம் ஆகியவற்றை திருத்துவதற்கான திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் இப்பிரதேச மக்கள் மிகப்பெரிதாக எதிர்நோக்கும் குடிநீர் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள வசதியாக, அருணோதயா சனசமூக நிலையத்திற்கு அருகில் இருக்கும் குடிநீர் கிணற்றுடன் நீர்தொட்டி ஒன்றை அமைத்து அதன் மூலம் இந்தப் பிரதேசம் முழுவதும் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்குவதற்கு புதிய திட்டம் வரைபடங்களோடு தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் அபிவிருத்திக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட திட்டங்களை அந்த அபிவிருத்திக்குழுவினர் வடக்கு - கிழக்கிற்கான மீள்கட்டுமான திட்டத்தினதும், உறைவிட சமூக உள்கட்டமைப்பு திட்டத்திற்குமான யாழ். அலுவலகத்துக்கு நிதியுதவி கோரி அனுப்பி வைத்திருப்பதாகவும், இவர்களால் இத்திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுமாயின் - அதன் மூலம் தமது பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்ககூடியதாக இருக்குமெனவும் அபிவிருத்திக் குழுவினர் தெரிவித்தனர். (31)

# பாடசாலைகளிடையேயான கிரிக்கெட் சுற்றுப் போட்டி!

யாழ்ப்பாணம்—

அகில இலங்கை ரீதியில் பாடசாலை அணிகளிடையே நடைபெறும் கிரிக்கெட் போட்டித் தொடரில் 17 வயதுப் பிரிவுக்கான யாழ்.மாவட்ட போட்டிகள் இன்று முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டித்தொடரின் முதல் சுற்று ஆட்டங்களில் ஆறு போட்டிகள் இன்று யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் -

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் - கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் சென். பற்றிக்ஸ் கல்லூரி

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் - யாழ்.இந்துக் கல்லூரி எதிர் சென்.ஜோன்ஸ் கல்லூரி.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் - சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி எதிர் ஹாட்லிக் கல்லூரி.

ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் - யாழ்.மத்திய கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதய கல்லூரி.

கிளிநொச்சி மகா வித்தியாலய மைதானத்தில் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் எதிர் கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

யூனியன் கல்லூரி மைதானத்தில் - யாழ்ப்பாண கல்லூரி எதிர் யூனியன் கல்லூரி ஆகிய அணிகளுக்கிடையே போட்டிகள் நடைபெறவுள்ளன. (58)

# நாயன்மார்கட்டு பகுதி மக்களின் அடிப்படை பிரச்சினைகள் தீருமா?

## அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்—

கந்த முப்பது வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாது இருக்கும் நாயன்மார்கட்டு - பாரதி வீதி, நல்லூர் வடக்கு விநாயகர் வீதி இரண்டையும் இணைக்கும் வயல்வெளி ஒழுங்கையை சீரமைத்துத்தர உதவுமாறு நாயன்மார்கட்டு பார திமன்ற சனசமூக நிலையத்தினர், உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

பல நூறு பொதுமக்கள் இரவுகளிலும் பயன்படுத்தும் பாரதி வீதிக்கு வீதி விளக்குகளைப் பொருத்த ஆவன செய்யவேண்டும். பாரதி வீதியை அண்டி வாழும் இருநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் குடிநீர் பிரச்சினையை தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமது இப்பிரச்சினைகள் தொடர்பாக உள்ளூரிலுள்ள அதிகாரிகளிடம் பலமுறை தெரிவித்தும் இதுவரை எதுவித நடவடிக்கைகளையும் அவர்கள் எடுக்காத காரணத்தால் - இந்த மகஜரை தாம் மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைப்பதாகவும், முடியுமானால் நேரில் வந்து தமது மக்கள் படும் சிரமங்களை கண்டறிந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (31)

# நீதிமன்ற பயிலுனர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது!

யாழ்ப்பாணம்—

நீதிமன்ற பயிலுனர் மற்றும் நொத்தாரிசு ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்களை இலங்கை வங்கி கோரியுள்ளது.

இந்தப் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த சாதாரண தரத்துடன் உயர்தரம் சித்தியடைந்திருப்பதுடன், சட்ட நிறுவனம் ஒன்றில் இரண்டு வருட அனுபவம் அல்லது நீதிமன்ற நொத்தாரிசு எழுதுநராக சட்டத்தரணி ஒருவரின் கீழ் பணி செய்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

சுயவிபரக்கோவை, பிறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட அனைத்து சான்றிதழ்களினதும் போட்டோ பிரதிகள் என்பன பதிவுத்தபால் மூலம் - ஆளணி முகாமையாளர் (மனிதவள அபிவிருத்தி) இலங்கை வங்கி, 26 ஆம் மாடி, இல-04, மக்கள் வங்கி, கொழும்பு-01 எனும் முகவரிக்கு அடுத்த மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வருடாந்த மஹோற்சவம்

மானிப்பாய்—

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் இந்த மஹோற்சவத்தில் - எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும், வியாழக்கிழமை பிராயச்சித்த விழாவும் வெள்ளிக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. எதிர்வரும் ஜுலை மாதம் 1 ஆம் திகதி நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது. (100)

# மீளக்குடியமர்ந்த மக்களுக்கு ஐ.ஓ.எம் நிறுவனம் உதவி!

யாழ்ப்பாணம்

கடந்த யுத்தகாலத்தில் அகதிகளாக தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்து மீண்டும் தாயகம் திரும்பியுள்ள மக்களுக்கு ஐ.ஓ.எம் நிறுவனத்தினரால் உதவிகள் வழங்கப்பட்டுவருகின்றன.

இதனடிப்படையில் கோப்பாய் பிரதேசசெயலக பிரிவில் மீளக்குடியமர்ந்த 20 குடும்பங்களுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் மேற்படி குடும்பங்கள் தமது தொழில் மூலம் வருமானம் உழைக்கும் காலம் வரையும் மாதாந்தம் 1,400 ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் குடும்பங்களில் சொந்தக் காணியில் உள்ள குடும்பங்களுக்கு மலசலகூடங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (90)

# ஏகாதசி விரதம்

யாழ்ப்பாணம்—

நாகேஸ்வரம் அளவெட்டி தெற்கு நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஏகாதசி தீர்த்தப் பூசை சிறப்பாக நடைபெறவிருக்கிறது.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து தீர்த்தமாட சுவாமி எழுந்தருளுவார். (206)


## சிறு விளம்பரம்

### புதிய புத்தகம்

விற்பனையில் சாதனைசெய்த 'இது இந்துமதம்' நூலின் ஆசிரியர் 'சாமிஜி' எழுதிய புதிய புத்தகம் 'கோயில் பூசைகள் தமிழாக வேண்டும்' விலை ரூபா 80/= பரணன், 138, ராசாவின்தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி:- 2222365 (1199)

### ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

Pandit Nara Semanaidu
World Expert Astrologer

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கை ரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P - 0779122836 நேரம்: காலை 9.00 - 8.30 வரை (1198)

மனோகரா யாழ்ப்பாணம்

ஸ்ரீகாந்த், கோபிகா, விவேக் நடித்த கனா கண்டேன்

ஜீன் 17 முதல் அதிரடி வெளியீடு!
சியான் விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி, சார்லி ஆகியோரின் சிறந்த நடிப்பில்



அந்நியன் anniyan

இசை:- ஹரிஸ் ஜெயராஜ் இயக்கம்:-சங்கர்

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை

உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா ஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த அறிந்தும் அறியாமலும்

பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்

காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்

சரத்குமார், நெப்போலியன், தேவயானி, விவேக் நடித்த தென்காசிப் பட்டணம்

17 முதல் கற்க கசடற

பு.நே: 10.30, 2.30, 6.30 மட்டும்

நாகம்ஸ் சுன்னாகம்

இன்றுமுதல் ரமேஷ், பூஜா, சரத்குமார் நடித்த ஜித்தன்



காட்சிகள்:- 11.00,3.00, 6.00 (பழைய நேரம்)

நாகதன்வி யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

இன்டி பென்டன்ஸ் டே டைரக்டர் ரோலண்ட் எம்ரீக் மீண்டும் முத்திரை பதிக்கும் படைப்பில்

THE DAY AFTER TOMORROW

நாளை மறுநாள் (தமிழாக்கம்)

சுனாமி போன்ற அழிவுகளை சித்தரிக்கும்

காட்சிகள் புதிய நேரம்:- 10.30,2.30,6.30,9.30


## தெல்லிப்பளை ப.நோ.கூ சங்கம் (வரையறுக்கப்பட்டது)

### கிராமிய வங்கியின் மீதியை உறுதிப்படுத்தல்

மேற்படி சங்கத்தின் 31.12.2004 இற்கான வருடாந்த கணக்காய்வு நடைபெற்றுக்கொண்டிருப்பதால் கிராமிய வங்கியின் வாடிக்கையாளர்கள் 24.06.2005 ம் திகதிக்கு முன்னர் கிராமிய வங்கியிலுள்ள தங்களின் மீதிகளைச் சரிபார்த்துக்கொள்ளும் பொருட்டு தங்களின் கையேட்டுப் புத்தகங்களையும், நிலையான வைப்புச் சான்றிதழ்களையும் நேரில் சமர்ப்பித்து மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஐ.சிங்கராசா
பொதுமுகாமையாளர்,
தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்

13.06.2005

(ஜ-4201)

## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

### பாண் விலை மாற்றம்

15.06.2005 இன்றிலிருந்து 450 கிராம் பாணின் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலை ரூபா 19.00 ஆகும் என்பதனை அங்கத்தவர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம். நிறை, தரம், விலை ஆகியவற்றில் குறைபாடுகள் இருப்பின் எமக்கு அறியத்தரவும்.

**குறிப்பு** - பேக்கரி மா தேவைப்படுவோர் எம்மிடம் தொடர்புகொள்ளவும். (பிறிமா மில் பிராண்ட்)

559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

நிர்வாகம்
யா.மா.பே.உ. சங்கம்


(ஜ-4200)

## பொதுக்கட்டமைப்பை உருவாக்கும்
# ஜனாதிபதி சந்திரிகாவின் திட்டங்களை
# சோபித தேரர் முறியடித்துவிட்டாராம்!

## ஹெல உறுமய எம்.பி. கூறுகிறார்

கொழும்பு—

பொதுக்கட்டமைப்பு அமைப்பது தொடர்பான ஜனாதிபதி சந்திரிகாவின் அனைத்து முயற்சிகளையும் சோபித தேரரின் உண்ணாவிரதம் முறியடித்து விட்டதாக, ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.



கொழும்பு சேருவாவில பௌத்த நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் -

கடந்த 7 ஆம் திகதி பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்திருந்தார். பொதுக்கட்டமைப்புத் தொடர்பான உடன்படிக்கையின் உள்ளடக்கம் என்னவென்பது அவருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் மட்டுமே தெரியும்.

இதுபற்றி அமைச்சரவை கூட எதுவும் அறிந்திருக்கவில்லை. எவ்வாறாயினும் ஓமல்பே சோபிததேரரின் உண்ணாவிரதத்தை அடுத்து, இந்த அனைத்து முயற்சிகளும் முறியடிக்கப்பட்டுள்ளன.

தற்போது இந்தப் பொதுக்கட்டமைப்பிற்கு முழு நாடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

மகாநாயக்கர்களின் அனுமதியின்றி பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்படமாட்டாதென ஜனாதிபதி தெரிவித்துள்ளார். மகாநாயக்கர்களின் உறுதிமொழியை அடுத்தே, இந்த உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. இந்த உறுதிமொழியை ஜனாதிபதி மீறினால், ஜாதிக ஹெல உறுமய மட்டுமல்லாது, மகாநாயக்கர்களும், முழு நாட்டு பௌத்த மக்களும் அவருக்கெதிராக அணி திரள்வார்கள்.

ஜனாதிபதி தற்போது எமது பிக்குமார்கள் பின்னாலும், எமது ஆதரவாளர்கள் பின்னாலும் இரகசிய பொலிஸாரை அனுப்புகிறார். கொழும்பிலிருக்கும் புலிகளைக் கைதுசெய்ய அவர் நடவடிக்கை எடுக்காது, எங்கள் ஆதரவாளர்களைக் கட்டுப்படுத்த முயல்கிறாரென அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவின் அமைப்பாளர் கூறுகையில் -

உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில் அத்துரலிய ரத்னதேரர் கருத்துத் தெரிவித்த பின்னரே பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புகள் கிளம்ப ஆரம்பித்தன. பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக யாருக்கும் எதுவும் கூறத்தேவையில்லை என்றே ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

இந்த உடன்படிக்கை கைச்சாத் திடப்பட்ட பின்னர், அரசாங்கத்தை விட்டு வெளியேறுவதில் அர்த்தமில்லை. அரசாங்கம் இல்லாவிட்டாலும், இந்தக் கட்டமைப்பு இருக்கும். சோபித தேரரின் உண்ணாவிரதத்தால் ஜனாதிபதி உடன்படிக்கையில் கைச்சாத்திடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டாலும், பொதுக்கட்டமைப்புக்கு எதிரான எமது போராட்டத்தை நாம் இதுவரை கைவிடவில்லை.

இந்த உண்ணாவிரதத்தால் மகாநாயக்கதேரர்களுக்கு முதல் முறையாக வானூர்தி வழங்க வேண்டிய நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டது.

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஊர்வலம் சென்ற எமது பிக்குமார் மீது கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசினார்கள். ஆனால் திருமலையில் புத்தர்சிலை மீது குண்டுத்தாக்குதல் நடத்துபவர்கள் மீது கண்ணீர் புகைக் குண்டுகளை வீச மாட்டார்கள் எனத் தெரிவித்தார்.

## நாடு திரும்பினார் தயா சந்தகிரி!

கொழும்பு—

ஒரு வாரகால இந்திய விஜயத்தின் போது நடத்தப்பட்ட பேச்சுக்களின் மூலம் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான பரஸ்பர பாதுகாப்பு உறவுகளில் நெருக்கத்தை ஏற்படுத்த முடிந்ததாக கூட்டுப்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தெரிவித்தார்.



கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு திரும்பிய அவர் செய்தியாளர்களிடம் பேசியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது இந்திய விஜயத்தின் போது இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம், பிரதமர் மன்மோகன் சிங், இராணுவ, கடற்படை, விமானப்படை தளபதிகள் ஆகியோருடன் இருநாட்டு பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாகவும் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

அத்துடன் இந்த விஜயத்தின் போது இராணுவ, கடற்படை, விமானப் படைத் தளங்களுக்கும் விஜயம் செய்த அவர் இந்தப் பேச்சுக்களின் மூலம் இருதரப்பு உறவுகளில் நெருக்கத்தை ஏற்படுத்த முடிந்ததாகவும் தெரிவித்தார்.

## புத்தர் சிலை விவகாரம் வழக்கு ஒத்திவைப்பு

திருகோணமலை—

திருகோணமலை புத்தர் சிலை அமைப்புத் தொடர்பில் சட்டமா அதிபரினால் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு வேறொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையில், வழக்கை ஓகஸ்ட் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிபதி தியாகேந்திரன் அன்றைய தினம் முச்சக்கர வண்டிச் சாரதி சங்கத்தின் செயலரை ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

## பொதுமன்னிப்புக் காலம் கடந்த திங்களன்று ஆரம்பம்

கொழும்பு—

இராணுவத்திலிருந்து தப்பிச்சென்றவர்களை நிரந்தரமாகப் படையிலிருந்து விடுவிக்கும் ஒரு சந்தர்ப்பம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 24ஆம் திகதிவரை கொழும்பு மலே வீதியிலுள்ள இராணுவ ஆட்சேர்ப்பு நிலையத்தில் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. 2003 ஜனவரி 8 ஆம் திகதியன்று படைகளில் இருந்து தப்பிச் சென்றவர்களாகப் பிரகடனப்படுத்துபவர்கள் இந்த நடவடிக்கைகளின் கீழ் நிரந்தரமாகப் படைகளில் இருந்து விலக்கப்படவுள்ளனர். இலங்கையில் படைகளில் இருந்து சுமார் 80 ஆயிரம் பேர்வரை தப்பிச் சென்றுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (01)

## ஜே.வி.பியுடன் சமரசத்துக்கு மகிந்த ராஜபக்ஷ முயற்சி!



ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் ஜே.வி.பியுடன் ஏற்பட்டு வரும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

பொதுக்கட்டமைப்பு யோசனைகளைக் கைவிடுவதாக ஜனாதிபதி சந்திரிகா அறிவிக்காவிட்டால், எதிர்வரும் 15 ஆம் திகதி நள்ளிரவுடன் அரசாங்கத்திலிருந்து விலகப்போவதாக ஜே.வி.பி எச்சரிக்கை விடுத்திருக்கின்ற நிலையில்,

இறுதிக்கட்ட முயற்சியாக ஜே.வி.பியை சமரசம் செய்வதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறைந்தபட்சம் தற்போது ஜே.வி.பி விதித்திருக்கும் காலக்கெடுவை மேலும் சில நாட்களுக்கு நீடிக்கமுடியுமா என்பது குறித்து ஜே.வி.பி.யினருடன் அவர் ஆராய்ந்தார்.

அத்துடன் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தர்களுடனும், தற்போது நாட்டில் தோன்றியிருக்கின்ற நெருக்கடி நிலை குறித்து அவர் நேற்று முன்தினம் விரிவான ஆலோசனை நடாத்தியிருப்பதாகவும்,

ஜே.வி.பி அரசிலிருந்து வெளியேறுவதால் ஆட்சி கவிழும் நிலை ஏற்படாமல் தடுப்பதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் குறித்து அவர் இதன் போது அதிக கவனம் செலுத்தியிருப்பதாகவும் பிரதமர் அலுவலக வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

## பொதுக்கட்டமைப்பு குறித்து
# பொதுமக்களுக்கு விளக்க கண்டியில் மாபெரும் பேரணி!

கொழும்பு—

தென்னிலங்கையில் பொதுக் கட்டமைப்புக்கு எதிரான போராட்டங்கள் தீவிரம் பெற்றுள்ள நிலையில் - இது குறித்து பொதுமக்களுக்கு விளமக்கமளிப்பதற்கான பேரணி ஒன்றை எதிர்வரும் 16 ஆம் திகதி கண்டியில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

ஜனாதிபதியின் தலைமையிலேயே இந்தப் பேரணி நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுக்கட்டமைப்பு தொடர்பாக அரசியற் கட்சிகள், தொழிற் சங்கங்கள் பொது மக்களுக்கு விரிவான விளக்கத்தையளிக்கும் வகையிலான செயற்பாடுகளை அடுத்த சில நாட்களுக்குள் மேற்கொள்வதென்று ஜனாதிபதிக்கும், பிரதி அமைச்சர்களுக்கும் இடையே கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி மாளிகையில் நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.



அத்துடன் பொதுக்கட்டமைப்பு குறித்து மக்களுக்கு விளக்கமளிக்கும் வகையில், துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப துண்டுப்பிரசுர விநியோகம் இவ்வார இறுதியில் கொழும்பு கோட்டையில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் அது நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும்.

## மட்டக்களப்பில் கிரனேட் வீச்சு!

மட்டக்களப்பு—

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் - மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் மீது நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஊழியர் ஒருவர் காயமடைந்தார். அலுவலகத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளொன்றும் சேதமடைந்தது.

மட்டக்களப்பு நகரில் டயஸ் வீதியில் அமைந்துள்ள குறிப்பிட்ட அலுவலகம் மீது இரண்டு கைக்குண்டுகள் வீசப்பட்டன. இந்த வழியாக மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்களே இந்தக் கைக்குண்டை வீசியதாகக் கூறப்படுகிறது.

# பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கு விடுமுறை காலத்தில் கொடுப்பனவு

கொழும்பு—

பட சாலைகளின் தவணை விடுமுறையின் போதும் பட்டதாரி பயிலுநர்களாக உள்ள ஆசிரியர்களுக்கு சம்பளக் கொடுப்பனவுகளை வழங்குமாறு கல்வியமைச்சின் மேலதிக செயலர் எஸ். எல். குணவர்த்தன சகல கல்விப்பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

பாடசாலை தவணை விடுமுறை காலங்களின்போது, பட்டதாரி பயிலுநர்களின் விடுமுறை தொடர்பாகவும், அவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவை வழங்குவது குறித்தும் சில கல்வி வலயங்களில் கருத்து முரண்பாடுகள் ஏறபட்டிருந்தன. இது குறித்து கல்வியமைச்சின் கவனத்துக்கு கொணடு வரப்பட்டதையடுத்து, இந்த விடயம் தெளிவுபடுத்தப்பட்டுளளது.

அரச அலுவலகங்களில் பயிலுநர்களாக நியமனம் பெறுவோருக்கு வருடமொன்றுக்கு 14 நாட்கள் ஓய்வு விடுமுறையும், 7 நாட்கள் அமைய விடு முறையும் வழங்கப்படுவதே வழமையாகும். இந்த நடைமுறையே பட்டதூரி பயிலுநர் விடயத்திலும் பின்பற்றப்பட்டு வருகிறது.

எனினும் பாடசாலைகளின் தவணை விடுமுறைக் காலத்தில் அந்த விடுமுறையை பட்டதாரி பயிலுநர்களும் அனுபவிப்பதற்கு உரித்துடையவர்கள் எனவும் இந்தக் காலப் பகுதியில் இவர்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவை வழமைபோன்று வழங்குமாறும் கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

## சுதந்திரத் தகவல் சட்டமூலம் அவசியமென பீரிஸ் வலியுறுத்து

கொழும்பு—

தற்போதைய காலகட்டத்தில் சுதந்திரத் தகவல் தொடர்பான சட்டமூலம் மிகவும் இன்றியமையாதவையென ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். ஊடகங்களுக்கான தகவல் சுதந்திரமெனும் தலைப்பில் கொழும்பு, கொன்டினென்டல் உல்லாசவிடுதியில் நடைபெற்ற செய்திட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தர்.

உலக வங்கி நிறுவனம் மற்றும் கொழும்பு மாற்றுக்கொள்கைகளுக்கான மத்திய நிலையம் என்பன இணைந்து இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்தன.

அங்கு மேலும் உரையாற்றிய பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் -

தகவல் சுதந்திரத்துக்கான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவேண்டியது அவசியமானதாகும். இந்தச சட்டமூலத்தைக் கொண்டுவருவ தன்மூலம் நாட்டில் ஜனநாயகத்தை நிறைவேற்ற முடியும்.

அமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் அனைத்திலும் தகவல் தொடர்பாடலுக்கென அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டு, மக்களுக்குத் தகவல் வழங்கப்படவேண்டும். இலங்கை பிரஜை ஒவ்வொரு வரும் நாடு தொடர்பான தகவலை அறிந்துகொள்வதற்கு உரிமை உடையவர்கள் எனத் தெரிவித்தார்.

## பந்துக்குள் நவீன கருவி: உதைபந்தாட்டத்தில் அறிமுகம்!




பிராஸ்பர்ட்—

உதைபந்தாட்டப் போட்டியில் கோல் விழும்போது சில நேரங்களில் பிரச்சினை ஏற்படுவதுண்டு. பந்துகோல் எல்லையைத் தாண்டியதா? இல்லையா? என்பதை தெளிவாக அறிய முடியாது. நடுவர்களோ அல்லது தொலைக்காட்சி கமராக்களோ கூட இதைக் கண்டுபிடிக்கமுடிவதில்லை.

1966ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இங்கிலாந்தும் - மேற்கு ஜேர்மனியும் மோதியபோது, இதே போன்று பிரச்சினை ஏற்பட்டது. இதுபோல சர்வதேச போட்டிகளில் அடிக்கடி பிரச்சினை ஏற்படுகிறது.

இதைத் தடுக்க உதைபந்திலேயே கம்யூட்டர் மைக்ரோ ஷிப்பைப் பொருத்தி பந்து கோல் எல்லையைத் தாண்டியதா? என்பதைக் கண்டுபிடிக்க உள்ளனர். பந்தில் இந்தக் கருவியைப் பொருத்தி சோதனை செய்து பார்த்ததில் வெற்றிகரமாக செயற்படுகிறது.

முதன் முதலாக இதை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் பெரு நாட்டில் நடைபெறும் 17 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் பரீட்சார்த்தமாகப் பயன்படுத்தவுள்ளனர். இது வெற்றிகரமாக அமைந்தால் 2006இல் நடைபெறும் உலகக் கிண்ண காற்பந்து போட்டியில் இதைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளனர்.

இந்தத் தகவலை உலக உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் செப்பிளேட்டர் தெரிவித்துள்ளார்.

# விளையாட்டு

## ருவென்ரி -20 கிரிக்கெட்டில் அவுஸ்ரேலியா படுதோல்வி!



லண்டன்—


லண்டனில் நடைபெற்ற ருவென்ரி -20 கிரிக்கெட் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 100 ஓட்டங்களால் அவுஸ்ரேலியாவைத் தோற்கடித்தது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 179 ஓட்டங்களைக் குவித்தது.

ட்ரெஸ்கொதிக் 37 பந்துகளில் 41 ஓட்டங்களையும், ஜோன்ஸ் 14 பந்துகளில் 19 ஓட்டங்களையும், பிளின்ரொப் 5 பந்துகளில் 6 ஓட்டங்களையும், பீற்றர்சன் 18 பந்துகளில் 34 ஓட்டங்களையும், வோன் ஓட்டமெதையும் பெறாமலும், கொலின்வூட் 26 பந்துகளில் 46 ஓட்டங்களையும், ஸ்ரரஸ் 16 பந்துகளில் 18 ஓட்டங்களையும், சோலங்கி 5 பந்துகளில் 9 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மக்ரா 3, சைமன்ஸ் 2, கஸ்பரோவிச், ஜிலெஸ்பி, கிளார்க் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.



பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 14.3 ஓவர்களில் 79 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 100 ஓட்டங்களால் படுதோல்வி கண்டது.



கில்கிறிஸ்ட் 15, ஹைடன் 6, ஹுசே 1, மார்ட்டின் 4, லீ 15, ஜிலெஸ்பி 24, மக்ரா 5, கஸ்பரோவிச் 3 ஓட்டங்களை எடுத்தனர். சைமன்ஸ், கிளார்க், பொண்டிங் ஆகியோர் ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் லூவிஸ் 4, கோ 3, கொலின்வூட் 2, ஹர்மிசன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இந்த ஆட்டத்தின் ஆட்டநாயகனாக பீற்றர்சன் தெரிவானார்.


## மூன்றாவது முறையாக ரொடிக் சம்பியனானார்!

லண்டன்—

குயின்ஸ் கிளப் ரெனிஸ் தொடரில் அன்டி ரொடிக் தொடர்ந்து மூன்றாவது முறையாக சம்பியன் பட்டம் கைப்பற்றினார்.

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் இந்தத் தொடர் நடைபெற்றது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் அன்டி ரொடிக், குரோஷியாவின் இவோ கர்லோவிக்கை எதிர்த்து விளையாடினார்.

முதல் செட்டில் கடும் போட்டி நிலவியது. இதில் ரொடிக் 7-6 என்ற முன்னிலையில் வெற்றி பெற்றார். இதேபோல் இரண்டாவது செட்டிலும் கர்லோவிக் கடும் நெருக்கடி கொடுக்க, ரொடிக் போராடி வெற்றியை எட்டினார். சுமார் 1 மணிநேரம் 20 நிமிடங்கள் நடந்த இந்தப் போட்டியில் ரொடிக் 7-6, 7-6 என்ற செட்களில் கர்லோவிக்கை வீழ்த்தினார். இதன் மூலம் இந்தத் தொடரில் தொடர்ந்து மூன்றாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார் ரொடிக்.



## இங்கிலாந்து கவுண்டி அணியை பங்களாதேஷ் அணி வீழ்த்தியது!

வார்செஸ்டர்—

இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் பங்களாதேஷ் அணி முதல் வெற்றியைப் பெற்றது. ஒருநாள் பயிற்சிப் போட்டியில் வார்செஸ்டர்ஷயர் அணியை 4 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இங்கிலாந்து சென்றுள்ள பங்களாதேஷ் அணி நட்வெஸ்ட் முத்தரப்பு ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. இதற்கு முன்னதாக, உள்ளூர் கழக அணிகளுக்கு எதிராக பயிற்சிப் போட்டியில் விளையாடியது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஒரு நாள் போட்டியில் பங்களாதேஷ், வார்செஸ்டர்ஷயர் அணிகள் மோதின.

பங்களாதேஷ் வீரர்கள் சிறப்பாகப் பந்துவீச வார்செஸ்டர்ஷயர் 168 ஓட்டங்களுக்கு சுருண்டது. நஜ்முல் ஹுசேன், காலித் மொகமட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

அடுத்து துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது. வேகப்புயல் பந்துவீச்சாளரான சொகைப் அக்தர், ரஜின் சாலேயின் விக்கெட்டை வீழ்த்தினார். இதன்பின், ஜாவித் ஓமர் (43), மொகமட் அஸ்ரபுல் (40) பொறுப்புடன் ஆடி அணியை வெற்றிக்குக் கொண்டுசென்றனர்.

36 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 169 ஓட்டங்களை எடுத்து வெற்றிபெற்றது. கப்டன் ஹபிபுல் பஷார் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். முதல் முறையாக இங்கிலாந்து சுற்றுப்பயணம் சென்றுள்ள பங்களாதேஷ் அணி பெறும் முதல் வெற்றி இதுவாகும்.

## ஆனந்த் சம்பியனானார்!

லியோன்—

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் உலக செஸ் போட்டியில் விஸ்வநாதன் ஆனந்த் வெற்றி பெற்றார்.

ஸ்பெயின் நாட்டிலுள்ள லியோன் நகரில் உலக அளவிலான செஸ் போட்டி நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டியில் இந்திய வீரர் விஸ்வநாதன் ஆனந்தும், உஸ்பெகிஸ்தான் நாட்டு வீரர் ருஸ்டம் காசிம் என்பவரும் மோதினார்கள். முதல் சுற்றில் விஸ்வநாதன் ஆனந்த் தோல்வியடைந்தார்.

அடுத்த 2ஆவது சுற்றிலும், 4ஆவது சுற்றிலும் வெற்றிபெற்றார். 3ஆவது சுற்று சமனிலையானது. எனவே விஸ்வநாதன் ஆனந்த் 2.5-1.5 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

## வீரர்களின் பொருட்கள் அபேஸ்!

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்துவரும் அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி வீரர்கள் மைக்கல் கிளார்க், மைக்கல் கஸ்பரோவிச் ஆகியோரின் துடுப்பாட்ட மட்டைகள் உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்கள் திருட்டுப் போயுள்ளன.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. இதற்காக ரிக்கி பொண்டிங் தலைமையிலான அவுஸ்ரேலிய அணி, இங்கிலாந்து சென்றுள்ளது.

இந்த நிலையில் அவுஸ்ரேலிய - லீசெஸ்டஷயர் அணிகளிடையேயான பயிற்சி ஒருநாள் ஆட்டம் சவுதம்டனில் நடைபெற்றது. இதில் அவுஸ்ரேலிய அணி 95 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இந்தப் போட்டி முடிந்து அரங்கிலிலுள்ள அறைக்குத் திரும்பிய அவுஸ்ரேலிய அணியின் துடுப்பாட்ட வீரர் மைக்கல் கிளார்க், வேகப்பந்து வீச்சாளர் மைக்கல் கஸ்பரோவிச் ஆகியோருக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

மைக்கல் கிளார்க் அரங்குக்கு கொண்டுவந்திருந்த 5 துடுப்பாட்ட மட்டைகள், 7 சோடி கையுறைகள், 5 சோடி பாதணிகள், ஒருநாள் போட்டித் தொடருக்கான கால்காப்புக்கள் ஆகியவை காணாமற்போய் இருந்தன.

இதேபோல் மற்றொரு வீரரான கஸ்பரோவிச்சின் ஒருநாள் போட்டித் தொடருக்கான ஆடை, கால்காப்புக்கள் ஆகியவை பையுடன் அபேஸ் ஆகியிருந்தன.

தனது விளையாட்டு உபகரணங்கள் அனைத்தும் திருட்டுப் போனதால், மைக்கல் கிளார்க் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளார்.

அது காணாமற்போயிருப்பதால், புதிய கால்காப்புக்களுடன் அவர் ஆடுவது கடினம். அவர் உடனடியாக அவுஸ்ரேலியாவில் இருந்துதான் தனக்குரிய கால்காப்புக்களை தருவிக்க வேண்டிய நிலை உள்ளது.

## மேற்கிந்திய வெற்றி நழுவியமை பாகிஸ்தானுக்கு ஒரு கரும்புள்ளி!

### இன்சமாம்-உல்-ஹக் கூறுகிறார்



லாகூர்—

மேற்கிந்தியத் தீவுகளுடனான டெஸ்ட் போட்டியில் வெற்றிபெறமுடியாதது வருத்தத்தை அளிப்பதாக பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்சமாம்-உல்-ஹக் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி சமீபத்தில் மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்று அந்த நாட்டு அணியுடன் பல்வேறு போட்டிகளில் விளையாடியது. ஒருநாள் போட்டித் தொடரை பாகிஸ்தான் 3-0 என்ற கணக்கில் முழுமையாக வென்றது. அதன் பின்பு நடந்த டெஸ்ட் போட்டித் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனானது.

இந்த டெஸ்ட் தொடரை வெல்லமுடியாமல் போய்விட்டதே என்று பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்சமாம் தனது வருத்தத்தை வெளியிட்டிருக்கிறார்.

இது குறித்து அவர் லாகூரில் நிருபர்களிடம் கூறியதாவது -

மேற்கிந்தியத் தீவுகளை எதிர்த்து நடந்த டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் அணி கைப்பற்றியிருக்கவேண்டும். அப்படி ஜெயிக்கமுடியாமல் போனது பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு ஒரு கரும்புள்ளியாகும்.

இந்த ஆண்டின் இறுதியில் இங்கிலாந்துக்கு எதிராகவும், அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் இந்தியாவுக்கு எதிராகவும் பாகிஸ்தான் அணி விளையாடவுள்ளது. அதில் வெற்றிபெறுவோம் என்று உறுதியாக நம்புகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

## இங்கிலாந்து ரெனிஸ்: ஷரபோவா சம்பியன்!



ஜெர்ரிவேபர்—

லண்டனில் நடைபெற்ற உலக ரெனிஸ் போட்டியில் மரியா ஷரபோவா சம்பியன் பட்டம் வென்றார்.


டி.எப்.எஸ்.கிளாசிக் மகளிர் ரெனிஸ் இறுதிப் போட்டியில் ரஷ்யாவைச் சேர்ந்த உலகின் முதல்நிலை வீராங்கனையான மரியா ஷரபோவா - சேர்பிய நாட்டு வீராங்கனை ஜெலினா ஜான்கோவிச் ஆகியோர் மோதினார்கள். இதில் மரியா ஷரபோவா அபாரமாக ஆடி முதல் செட்டை எளிதாகக் கைப்பற்றினார்.

ஆனால் 2ஆவது செட்டை ஜெலினா போராடி ஜெயித்தார். பின்பு 3ஆவது செட்டில் ஷரபோவா அதிரடியாக ஆடி அந்த செட்டைக் கைப்பற்றினார். கடைசியில் அவர் 6-2, 4-6, 6-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானார்.

3. ஆந்தை வெள்ளை நிறமாதலால் பகல் நேரத்தில் அவை தெரியாது போகிறது. (.........)


08. காலம் என்ற அளவுமுறை , படிப்படியாகக் குறைந்து கொண்டு செல்லும் ஒழுங்கு முறை.
1. மாதம்,வாரம், நாள், நிமிடம்,மணி
2. வருடம், நிமிடம், மணி, வாரம், செக்கன்
3. செக்கன், நிமிடம், மணி, நாள், வாரம்
4. நூற்றாண்டு, ஆண்டு, மாதம், வாரம், நாள் (.........)

09. கீழே காணப்படும் உலர் மின்கலங்களுள் மிகச் சரியான வோல்ட் அளவைக் காட்டும் உலர் மன்கலத்தின் கீழே கோடுக.




பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.
10. நீருடன் கலக்காத ஒன்று?
1. சவர்க்காரம் 2. உப்பு 3.தேங்காயெண்ணை 4. சீனி
11. ஆறு மாதங்களுக்கு உட்பட்ட ஒரு குழந்தைக்கு மிக உகந்த ஆகாரம்.
1. சோறு 2.தாய்ப்பால் 3. இறைச்சி 4. முட்டை
12. அடிப்படை நிறங்களில் ஒன்று
1. நீலம் 2. பச்சை 3. ஊதா 4. செம்மஞ்சள்
13. அலங்காரத் தையல்களில் ஒன்று
1. நூலோடி 2. விஸ்பம்
3. வெட்டுக்குத்தையல் 4. நரம்புத் தையல்
14. மீன் இனத்தில் குட்டி போடும் இனம்.
1. ஓராமீன் 2. முரல் 3. திமிங்கலம் 4. விளைமீன்
15. இலங்கை வாழ் அனைவருக்கும் பொதுவான விழா
1. தமிழ்,சிங்களப் புத்தாண்டு விழா 2. நோன்புப் பெருநாள் விழா 3. சுதந்திரதின விழா 4. நத்தார் தின விழா

16. கீழே காணப்படும் ஒவ்வொரு வினாவிலும் A,B என்ற உருவங்களுக்கிடையே ஏதோ ஒரு விதத்தில் தொடர்புண்டு. அதன்படி C உருவத்துடன் அத்தகைய தொடர்புள்ள உருவத்தைத் தந்துள்ள நான்கு விடைகளில் இருந்து தெரிந்து அதன் கீழ் கோடுக.




17. கீழே தரப்பட்டுள்ள கட்டத்தினுள் உள்ள எண்களைப் பயன்படுத்தி விடையளிக்குக.
18.. 3 ஆல் மீதியின்றி வகுபடும் எண்கள் இரண்டு தருக.
..................................................
19. 3 ஆல் வகுக்கும் போது 1 மீதியாகும் எண்கள் எவை?
..................................................
கீழே தரப்பட்ட உருக்களில் உரு 1, உரு 11 என்பவற்றின் கூட்டுத்தொகைக்கு சமனான உரு 11 இல் நிறம் தீட்டுக.


20.



21. உரு நான்காவதற்குப் பொருந்தும் வகையில் உரு இரண்டாவதை நிழற்றிக் காட்டுக.



22. இடைவெளியை நிரப்பி சுற்றளவைக் காண்க.
சுற்றளவு .....................




கீழே காணப்படும் ஒவ்வொரு வினாவிலும் முதலில் தந்துள்ள சொற்களுக்கு ஏதோ ஒரு வகையில் தொடர்பு உண்டு. அதே போன்ற தொடர்பைக் காட்டும் வேறு இரண்டு சொற்களைத் தந்துள்ள நான்கு விடைகளில் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.

23. கோழிக்கு முட்டை எனின்
1. நாய்க்கு- இறைச்சி 2. தாய்க்கு - குழந்தை
3. அணிலுக்கு - முட்டை 3. குழந்தைக்கு - பால்
24. மண்வெட்டிக்கு வெட்டுதல் எனின்
1. புத்தகத்துக்கு - எழுத்து
2. விவசாயிக்கு - மண்வெட்டி
3. பேனாவுக்கு - எழுதுதல்.
4. கத்திரிக்கு - கை
25. காலுக்கு நடத்தல் எனின்
1. சக்கரத்துக்கு - வாகனம்
2. சப்பாத்துக்குக் - கால்
3. பேனாவுக்கு - மை
4. வாய்க்கு - கதைத்தல்

பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.
26. டெங்குக் காய்ச்சலை உண்டுபண்ணும் நுளம்புகள் உற்பத்தியாவது
1. உப்பு நீரில் 2. நன்னீரில் 3. அழுக்குநீரில் 4. ஓடும் நீரில்
27. உயிர்கள் மேல் வைக்கும் கருணை இவ்வாறு அழைக்கப்படும்.
1. இரக்கம் 2. சீபிமன்னன்
3. ஜீவகாருணியம் 4. உயிரன்பு
28. தாய், தந்தை, அரசன், குரு, தலைமையன் ஆகியோர்?
1. அங்கத்தவர் 2. பாதுகாவலர் 3. ஐம்புலத்தார் 4. ஐங்குரவர்.
29. " சாகாரா " என்பது ஒரு
1. மலைச்சிகரம் 2. பாலைவனம்
3. எரிமலை 4. கண்டம்.
30. மலர் தொடர்பாகப் பொருந்தாது.
1. மணமுள்ள 2. அலங்கார 3. சோம்பேறி 4.பெரிய

T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp.Trd
ஆசிரிய ஆலோசகர் மேல்மாகாணம்





மாணவர் மலர்

# மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - 2004

◆ அங்கரின் படம் உள்ளது. அதன்படி கீழே உள்ள வினாக்களுக்கு விடை தருக.




1) இந்தரின் ஒரு திண்மப் பொருளாகக் கருதும் போது அத்திண்மத்தின் பெயர் யாது?
..................................................
2) இதை உற்பத்தி செய்த திகதியிலிருந்து காலாவதியாகும் திகதி வரை உள்ள காலத்தை வருடம், மாதம், நாள் என்ற முறையில் எழுதுக.
..................................................
3) இதைப் போல் 15 ரின்களின் நிறையை கிலோகிராம், கிராமில் தருக.
..................................................
4) அங்கர் ரின்னுக்கு எத்தனை முகங்கள் உண்டு.
..................................................
5) இத்தகைய 5 ரின்களை வாங்கிக் கொண்டு ரூபா 1000 காசுத்தாள் ஒன்றைக் கடைக்காரனிடம் கொடுத் தால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?
..................................................
6) கடைக்காரனிடம் கொடுத்த பணத்தில் மீதிப் பணத்தை கொடுத்தபோது, 50 ரூபா தாள் காசுத் தாள்களைக் கொடுத்தார். 50 ரூபாத் தாளின் எண்ணிக்கை யாது?
..................................................
7) இந்த ரின் எவற்றிற்குப் பதிலாகப் பாவிக்கப்படுகிறது.
..................................................
8) அங்கர் என்பதை ஆங்கிலத்தில் எழுதுக.
..................................................

◆ கீழே கொடுக்கப்பட்டுள்ள பாடலை வாசித்து வினாக்க ளுக்கு விடை எழுதுக.

அருமை மிக்க நண்பனுக்கு
கடிதம் எழுதுவேன்
ஆசையாக வெள்ளைத்தாளை
எடுத்துக் கொள்வேன்
அன்புமிக்க யாதவனுக்கு
என்று தொடங்குவேன்
அச்சடித்த எழுத்தைப் போல
அழகாய் எழுதுவேன்
வணக்கம் என்றே அடுத்த வரியில்
தனியாய் எழுதுவேன்
வரிசையாகத் தகவல் யாவும்
புரியக் கூறுவேன்.

1) நண்பனுக்குக் கடிதம் எழுதும்போது எவ்வாறு ஆரம்பிக்க வேண்டும்?
..................................................
2) எழுத்துக்களை எவ்வாறு எழுத வேண்டும்?
..................................................
3) இங்கு தனியாய் எழுதிய சொல் எது?
..................................................
4) கடிதத்தில் ஒருவருக்குப் புரியக்கூடிய விதத்தில் எவ்வாறு எழுதவேண்டும்?
..................................................
5) எப்படியான தாளில் கடிதம் எழுதவேண்டும்?
..................................................

ஒத்த கருத்து எழுதுக.
6) 1) நண்பன் :- ..................
2) கடிதம் :- ..................
7) 1) தகவல் :- ..................
2) கூறுவேன் :- ..................

எதிர்க் கருத்து எழுதுக.
8) 1) வெள்ளை :- ..................
2) அன்பு மிக்க :- ..................

9) அழகாய் எழுதுவேன் இவ்வாக்கியத்தில் உள்ள எழுவாய் எது?
..................................................
10) கொள்வேன் என்ற சொல்லின் நிகழ்கால வடிவம் யாது?
..................................................

◆ கீழேயுள்ள கூண்டினுள் உணவுப் பொருட்கள் சிலவற்றின் பெயர்கள் காணப்படுகின்றன.

பருப்பு , மரவள்ளி, தோடம்பழம்,
உருளைக்கிழங்கு, மாஜரீன், அன்னாசி.

◆ மேலேயுள்ள விடைகளைக் கொண்டு விடை தருக.

1) காபோவைதரேற்று அதிகம் உள்ள உணவுப் பொருள்கள் இரண்டு தருக.
..................................................
2) புரதம் அதிகமுள்ள உணவுப் பொருள்கள் இரண்டு தருக.
..................................................


3) கொழுப்புச் சத்து அதிகமுள்ள இரு உணவுப் பொருட்களைத் தருக.

.............................................


4) விற்றமின்கள் அதிகமுள்ள உணவுப் பொருட்கள் இரண்டு தருக.

.............................................


◆ பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.




1) இந்த உருவின் சுற்றளவு யாது? .....................



2) இந்தச் சில்லு 1/2 பங்கு சுழலும்போது, அது சென்ற தூரம் 35cm எனின், இச்சில்லு மூன்று முறை சுழலும்போது சென்ற மொத்தத் தூரம் யாது? .....................



3) இந்த உருவில் புள்ளியிடப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னமாகும்? .....................

4) XXVII+IXXVI= என்பதன் கூட்டுத்தொகையை உரோம எண்ணில் எழுதுக.

.............................................

5) மு.பகல் 9.35 மணி 24 மணிக்கடிகார நேரத்தில் எழுதுக.

.............................................

6) ஒரு வீட்டிலுள்ள பிராணிகளின் மொத்த எண்ணிக்கை 20 ஆகும். அந்த வீட்டில் இருப்பது கோழியும், ஆடும் ஆகும். அந்த வீட்டில் உள்ள ஆட்டின் கால்களின் எண்ணிக்கை 40 எனின், அந்த வீட்டிலுள்ள கோழிகள் எத்தனை?

.............................................

7) கமல் 40 நிமிடத்தில் 4 பூக்களைச் செய்வான். கயன் 15 நிமிடத்தில் 2 பூக்களைச் செய்வான். நவி 1 மணித்தியாலத்தில் 7 பூக்களைச் செய்வான். மிகக் கூடிய வேகத்தில் பூக்களைச் செய்பவர் யார்?

.............................................




8) இவ்வெண்சட்டம் காட்டும் எண் யாது?

.............................................

9) ஏறுவரிசைப்படுத்துக 398, 473, 400, 289

.............................................

10) 500g சீனியின் விலை ரூபா 21 எனின், 2Kg சீனியின் விலை யாது?

.............................................

◆ பின்வரும் பொங்கல் வாழ்த்தைப் பார்த்த பின், வினாக்களுக்கு விடை தருக.

பொங்கல் வாழ்த்து
பச்சரிசிப் பொங்கலிட்டு
பால் பொங்கும் வேளையில்
பொங்கலோ பொங்கலென
புரித்துக் குலவையிடும்
தங்கவளை மங்கையரே
மங்களமாய் வாழியவே
அன்புள்ள நண்பன்
மயூரன்

1) பொங்கல் விழா எந்த மாதத்தில் நடைபெறுகிறது?

.............................................

2) மங்கலம் என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக.

.............................................

3) பொங்கலென என்பதைப் பிரித்து எழுதுக.

.............................................

4) இப்பாடலில் உள்ள வெள்ளை நிறப் பொருள் எது?

.............................................

5) பொங்கல் வாழ்த்து அனுப்பியவர் யார்?

.............................................

◆ பின்வருவன சரியாயின் (சரி) எனவும், பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.

1) தென்னை ஒரு இருவித்திலைத் தாவரமாகும் ( )
2) காட்டுக்கோழி இலங்கையின் தேசியப் பறவையாகும் ( )
3) வெளவால் இரவில் நடமாடுவதில்லை ( )
4) பொருட்கள் கீழே விழக்காரணம் புவியீர்ப்பாகும் ( )
5) நாயுருவி விலங்குகளால் பரவும் தாவரமாகும் ( )
6) கண்டங்களுள் சிறியது அவுஸ்ரேலியாவாகும் ( )
7) இரும்பு வெப்பத்தை நன்றாகக் கடத்தாது ( )
8) இலக்கங்கள் எல்லாமாகப் பத்து ஆகும் ( )
9) முகச்சவரம் செய்ய குழிவாடியைப் பயன்படுத்தமுடியாது ( )
10) ஒலிவ் இலை சமாதானத்தின் சின்னம் ஆகும் ( )

◆ கீழே காணப்படும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.

1) வெப்பத்தை அளக்கப் பயன்படுவதில் ஒன்று
1. சென்ரிமீற்றர் 2. பரனைற்று 3. மில்லிமீற்றர்

2) தட்டுப் பொல்லை பயன்படுத்துபவர்
1. தச்சன் 2. மேசன் 3. இரும்புவேலைசெய்பவன்

3) மிருகவைத்திய - வைத்தியம் செய்வது
1. கண்நோய்களுக்கு
2. பல் நோய்களுக்கு
3. மிருக நோய்களுக்கு



4) மட்டக்களப்பு மாவட்டம் அமைந்திருப்பது
1. கிழக்கு மாகாணத்தில்
2. வட மாகாணத்தில்
3. மேல் மாகாணத்தில்

5) இலங்கையில் மிகக்கூடுதலாக மழையைப் பெறும் இடம்
1. கண்டி 2. வட்டவளை 3. களுத்துறை

6) இலங்கையில் மாணிக்கக்கல் அகழும் சுரங்கங்கள் அதிகமாகக் காணப்படுவது
1. தொடங்கஸ்கந்தை 2. புத்தளம் 3. இரத்தினபுரி

7) தினகரன் எனப்படுவது
1. தினமும் வெளிவரும் பத்திரிகை
2. வாரம் வெளிவரும் பத்திரிகை
3. மாதம் வெளிவரும் பத்திரிகை

8) இலங்கையில் காணப்படும் இயற்கைத் துறைமுகம்
1. திருகோணமலை 2. கொழும்பு 3. வெள்ளவத்தை

9) அட்டவதானி எனப்படுவோன்
1. பத்து விடயங்களை ஒரே நேரத்தில் அறிந்து கொள்பவர்
2. எட்டு விடயங்களை ஒரே நேரத்தில் அறிந்து கொள்பவர்
3. நூறு விடயங்களை ஒரே நேரத்தில் அறிந்து கொள்பவர்

10) பொன்விழா கொண்டாடப்படுவது
1. 25வருடங்களில்
2. 60 வருடங்களில்
3. 50 வருடங்களில்

◆ பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆங்கில மொழியில் எழுதுக.

1) மேசை :- ...............
2) பாதுகாப்பு ஊழியர் :- ...............
3) வகுப்பறை :- ...............
4) மலசலகூடம் :- ...............
5) தாதி :- ...............
6) பட்டம் :- ...............

◆ பின்வரும் தமிழ்ச் சொற்களை சிங்கள எழுத்துக்களைப் பயன்படுத்தி சிங்கள மொழியில் எழுதுக.

1) நான்கு :- ............... 2) மின்விசிறி :- ...............

3) அக்கா :- ............... 4) அலுமாரி :- ...............


5) பாட்டி :- ...............

6) இடியப்பம் :- ...............


◆ தெருவோரத்தில் நான் கண்ட பிச்சைக்காரன் என்னும் தலைப்பில் நான்கு சொற்களுக்குக் குறையாத பொருத்தமான எழுவாய், பயனிலையுடன் கூடிய ஆறு வாக்கியங்கள் எழுதுக.

.............................................
.............................................
.............................................
.............................................


வினாத்தாள் 2




01. இங்கு நீர் நிரம்பிய போத்தல்கள் சில காட்டப்பட்டுள்ளன. அதிகமாக நீர் காணப்படுவது A தொகுதியில் உள்ள போத்தல்களிலா அல்லது B தொகுதியில் உள்ள போத்தல்களிலா அல்லது C தொகுதியில் உள்ள போத்தல்களிலா சரியான விடையின் கீழ் கோடிடுக.





02. கீழே காணப்படும் வினாவில் முதலில் தந்துள்ள உருவில் நிழற்றியுள்ள பின்னத்துக்குச் சமமான பின்னம் நிழற்றப்படாத உருவைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.




03 நிழற்றப்படாத உருவின் பின்னம் யாது?

1. 2/6 2. 4/6 3. 3/4 4. 3/6

04. பின்வரும் கோலத்தை அவதானித்து A, B ஆகியவற்றின் பெறுமானத்தை எழுதுக.




A ............................ B ............................




05. இந்தக் காட்போட் துண்டின் மூலம் வெட்டியெடுக்கக் கூடிய 5 Cm நீளம், 2 Cm அகலமுள்ள செவ்வக வடிவங்களின் எண்ணிக்கை யாது?

.............................................

◆ கீழே காணப்படும் ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தந்துள்ள மூன்று விடைகளில் இருந்து தெரிந்து விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

06. ஒரு தோட்டத்தில் அதிகளவு மரங்கள் உள்ளன. அந்தத் தோட்டத்தில் சில பலா மரங்களில் பழங்கள் உள்ளன. இதிலிருந்து விளங்குவது.

1. தோட்டத்தில் இருப்பது பலாமரங்கள் மாத்திரம் என்பதாகுமா?
2. தோட்டத்தில் பலாப்பழங்கள் இல்லாத பலா மரங்களும் உள்ளன என்பதாகும்.
3. தோட்டத்தில் வேறு பழவகை மரங்களும் உள்ளன என்பதாகும்.
(.........)

07. வானத்தில் பகல் இரண்டு மணியளவில் பறக்கும் ஆந்தையைக் கண்ட தங்கை சந்தோசத்தால் சத்தமிட்டாள்.
1. பகல் நேரத்தில் ஆந்தை வானத்தில் பறக்கமாட்டாது.
2. ஆந்தையால் பறக்க முடியாது.

# சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அதிபர், ஆசிரியர் விபரங்கள் திரட்டல்

ஆழியவளை—

சுனாமி அனர்த்தத்தால் பாதிப்புக்குள்ளான அதிபர் ஆசிரியர் மற்றும் அலுவலர்களினது சேத விபரங்களைக் கால தாமதமின்றி அனுப்பி வைக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் கோரியுள்ளது.

பாதிக்கப்பட்ட அலுவலர்கள் தமது சேத விபரங்களை வலயக்கல்வி அலுவலகங்களினூடாக அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேலும் பாதிப்பை உறுதிப்படுத்தக்கூடிய பொலிஸ்அறிக்கை, புகைப்படம் கிராம அலுவலர் அறிக்கை பிரதேச செயலர் அறிக்கை போன்றவற்றில் ஏதாவது ஒன்றின் போட்டோப் பிரதியையும் இணைத்து அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (122)

# பாடசாலை மட்டத்தில் கணிப்பீட்டின் முக்கியத்தை உணரவைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்—

பாடசாலை மட்டக் கணிப்பீட்டின் முக்கியத்துவத்தை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் தெளிவுபடுத்தி எதிர்காலத்தில் பரீட்சைகளுக்குப் பதிலாக கணிப்பீடு பயன்படுத்தப்படவுள்ளது என்ற யதார்த்தத்தை உணர வைப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

கல்வி அமைச்சு மற்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் திட்டமிட்ட முறையில் பாடசாலைகளுக்குச் சென்று மாணவர்கள் மற்றும் பெற்றோர்களைச் சந்தித்து கணிப்பீடு சம்பந்தமான கருத்தரங்குகளை நடத்தவுள்ளனர்.

இதுவரை காலமும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கே கணிப்பீடு சம்பந்தமான கருத்தரங்குகள் மற்றும் சேவைக் காலப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டன. கல்வி அமைச்சு எதிர்பார்த்த பயன் கிடைக்காத பட்சத்திலேயே பாடசாலை மட்டத்தில் கணிப்பீட்டின் முக்கியத்துவத்தை உணரவைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. தற்போது மதிப்பீட்டுக் கலாசாரம் மாற்றமடைந்து கணிப்பீட்டுக் கலாசாரமே முதன்மை பெற்றுவருகின்றது. க.பொ.த. சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் கணிப்பீட்டுப் புள்ளிகளுக்கு முக்கியத்துவம் படிப்படியாக அதிகரிக்கப்பட்டுவருகின்றது. (122)

# கடும் காற்றுக் காரணமாக குறிகட்டுவான் மக்கள் சிரமம்

நெடுந்தீவு—

நெடுந்தீவு - குறிகட்டுவான் இடையிலான கடற்போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் கடும் காற்றுக் காரணமாகப் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது வீசும் சோளகக் காற்றுக் காரணமாக கடற்கொந்தளிப்பினால் படகினுள் அலைகளால் அள்ளி வீசப்படும் கடல் நீரால் பயணிகளும், அவர்களது உடமைகளும் நனைவதுடன் பலர் உடற்சோர்வுக்கும் உள்ளாகும் நிலையும் ஏற்படுகிறது.

இதேவேளை, இந்தக் காலப் பகுதியில் வர்த்தகர்களால் வியாபார நோக்கில் எடுத்துவரும் பொருட்களும் கடல் நீரால் நனைந்து பழுதடையும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் - சாதாரணமாக ஒரு மணிநேர கடற் பயணம் தற்போதைய கடும் காற்று கடற்கொந்தளிப்புக் காரணமாக சுமார் ஒன்றரை, இரண்டு மணி நேரம் செல்லும் நிலையும் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

# ஐ.நா வீடமைப்பு திட்டத்தின்கீழ் பொலிகண்டி பிரதேசத்தில் 40 வீடுகள்

பருத்தித்துறை—

ஐக்கிய நாடுகள் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் ஐ.நா. வீடமைப்பு நிறுவனத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட பொலிகண்டி பிரதேசத்தில் 40 நிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இந்த நிறுவனத்தால் அமைக்கப்பட்டுவரும் வீடுகள் ஒவ்வொன்றும் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்படவுள்ளன.

இந்த வீடமைப்பு வேலைத் திட்டங்கள் இந்தமாத இறுதியில் ஆரம்பிக்கப்பட்டு செப்ரெம்பர் மாதத்துக்குள் முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக நிறுவனத்தின் திட்டப் பொறியியலாளர் தெரிவித்தார்.

# ஐநூறுரூபா கள்ளநோட்டு மக்கள் வங்கியில் சிக்கியது

சங்கானை—

சங்கானை மக்கள் வங்கிக் கிளையில் சேமிப்பிலிடுவதற்காக வாடிக்கையாளர் ஒருவரால் கொண்டுவரப்பட்ட இரண்டுலட்சம் ரூபாவில் ஐநூறு ரூபா போலி நோட்டு இருந்ததை வங்கி அலுவலர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

வாடிக்கையாளர் கொண்டு வந்த பணத்தை வங்கியின் பணம் எண்ணும் இயந்திரத்தில் போட்டு எண்ணும்போது இயந்திரம் ஒரு இடத்தில் இயங்காததால், சந்தேகம் கொண்டு பணத்தை எடுத்தபோது இந்தப் போலித்தாள் அடையாளம் காணப்பட்டது.

இதுபற்றி சங்கானைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. பணத்தை வங்கியில் வைப்புச்செய்ய வந்த நபர் பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (48)



வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தால் வல்வெட்டித்துறையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைத்துக்கொடுக்கப்பட்ட இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்தோருக்கு – சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் உதவியுடன் உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டதையும் –தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவியுடன் வலதுகுறைந்த ஒருவருக்கு முச்சக்கரவண்டி வழங்கப்பட்டதையும் படங்களில் காணலாம்.

# கூட்டாஞ்சோறு நிகழ்வு

நாவற்குழி—

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் பெண்கள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கிராமங்களில் மக்களோடு மக்களாகக் கூடி ஊரோடு உறவாடும் களமாகக் "கூட்டாஞ்சோறு" நிகழ்வைச் செயற்படுத்தி வருகின்றது.

இந்த நிகழ்வின்மூலம் அந்தக் கிராமங்களில் உள்ள பிரச்சினைகள், மக்களின் உளம் சார் பிரச்சினைகள் என்பன இனங்காணப்பட்டு, அந்தப் பிரச்சினைகளில் இருந்து அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் அந்தப் பகுதிகளை அபிவிருத்தி செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் நாவற்குழி வடக்கு செல்வநகரில் நாளை காலை 9.00 மணி தொடக்கம் 5.00 மணிவரை கூட்டாஞ்சோறு நிகழ்வு இடம்பெறவுள்ளது என அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

# முட்செடி நிறைந்து காணப்படும் யாழ்.நகர் பொம்மைவெளி வீதி

யாழ்ப்பாணம்—

யாழ்ப்பாணம் - பொம்மைவெளியிலிருந்து யாழ்.நகருக்குச் செல்லும் கல்லுண்டாய் வீதியின் இருமருங்கிலும் முட்செடிகள் வளர்ந்து காணப்படுவதால் மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

காக்கை தீவிலிருந்து யாழ். நகருக்குவரும் இந்தப் பாதையை மூடி முட்செடிகள் நீண்டு வளர்ந்து காணப்படுகின்றன. இதனால் இந்தப் பகுதியை சேர்ந்த மக்கள் யாழ்.நகருக்குள் செல்வதற்கும், யாழ்.நகரிலிருந்து அந்தப் பகுதிக்குச் செல்லும்போதும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும்இந்த முட்செடிகள் இன்னும் அகற்றப்படவில்லை.

அத்துடன் இந்த வீதியைச் சூழவுள்ள பகுதிகளில் குப்பைகள் மற்றும் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதனால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் மக்கள் சுகாதார சீர்கேடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா என அந்தப் பகுதியால் போக்குவரத்துச் செய்யும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### புத்தர்சிலை அழிப்பு

இருபாலை—

இருபாலைச் சந்தியில் அரச மரத்தடியில் படையினரால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவந்த புத்தர்சிலை கடந்த சனிக்கிழமை இரவு இனந்தெரியாதோரால் அடித்து நொருக்கப்பட்டது.

யாழ்.குடாநாட்டைப் படையினர் கைப்பற்றியவேளை இருபாலைச் சந்திக்குச் சமீபமாக படையினர் முகாம்களை அமைத்துத் தங்கியிருந்தவேளை இந்தப் புத்தர்சிலை நிர்மாணிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (90)

### சப்பற வெள்ளோட்டம்

உடுவில்—

உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் ஆலயத்துக்கு சுமார் 5 லட்சம் ரூபா செலவில் புதிய சப்பறம் உருவாக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ள சப்பறத் திருவிழாவன்று மாலை 4 மணிக்கு புதிய சப்பற வெள்ளோட்டம் நடைபெறும். (101)

### வீதி புனரமைப்பு

உடுவில்—

வலி.தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட பல வீதிகள் இந்த வருட முடிவுக்குள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இந்த வீதிகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதால், மிக விரைவில் கேள்விகள் கோரப்பட்டு புனரமைப்பு வேலைகள் ஒப்படைக்கப்படவிருப்பதாக பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (101)

### பவுஸர் அன்பளிப்பு

உடுவில்—

நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் யாழ்.அரசாங்க அதிபரால் வலி.தெற்கு பிரதேச சபைக்கு நீர்வழங்கும் பவுஸர் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இந்த பவுஸர்மூலம் நலன்புரி முகாம்களிலுள்ள மக்களின் குடிநீர் பிரச்சினை நீங்கியுள்ளதாகவும் - வடிகால்களில் தேங்கி நிற்கும் கழிவுநீரை பவுஸர் நீரால் அடித்துக்குழுவிச் சுத்தம் செய்ய முடிவதாகவும் தெரியவருகிறது. (101)

# மாகாண அபிவிருத்தி நன்கொடையிலிருந்து சுன்னாக நகர கழிவுநீர் வடிகால் புனரமைப்பு

சுன்னாகம்—


சுன்னாகம் நகரப்பகுதியிலுள்ள கழிவுநீர் வடிகால் திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

பல வருடங்களாகத் திருத்தப்படாத இந்தக் கழிவு நீர் வடிகாலில் அழுக்கு நீர் தேங்கி நிற்பதால் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் மக்கள் எப்போதும் மூக்கைப் பொத்திக் கொண்டே செல்ல நேரிடுகிறது. இந்த வடிகாலை முழுமையாகப் புனரமைக்கப் பாரிய நிதி ஒதுக்கீட்டை அரசாங்கத்திடம் வலி.தெற்குப் பிரதேசசபை கோரியிருந்தது.

ஆனால், தற்போது மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதியிலிருந்து சொற்ப தொகையே கிடைத்துள்ளது.

இந்த நிதியுடன் பிரதேச சபையின் நிதியையும் சேர்த்து வடிகாலை ஓரளவு புனரமைப்புச் செய்யவிருப்பதாகப் பிரதேச சபையால் தெரிவிக்கப்படுகிறது. (101)

இயற்கை காப்போம் இன்பம் பெறுவோம்
செயற்கை சுகங்கள் துன்பத்தின் திறவுகோல்



# யாழ்ப்பாண ஆற்றுப்படுத்தல் நிகழ்வில் சிங்கள சிறுவர்கள் கலந்துகொள்ளவில்லை

யாழ்ப்பாணம்—

யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ.நிறுவனம் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை ஆற்றுப்படுத்தும் நிகழ்வொன்றை யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் தென்னிலங்கையைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட பெரும்பான்மையின சிறுவர்களும் இணைந்து கொள்வதாக முன்னர் தெரிவிக்கப்பட்டு அவர்களுக்கு வேண்டிய தங்குமிட மற்றும் பிற வசதிகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில் இறுதி நேரத்தில் பெரும்பான்மையின சிறுவர்கள் யாழ்ப்பாணம் வருவது பாதுகாப்பு இல்லையெனத் தெரிவித்து இந்த நிகழ்வில் எவரும் கலந்துகொள்ளவில்லை. பெரும்பான்மையின பயிற்சியாளர்கள் மட்டுமே இதில் பங்குபற்றியுள்ளனர்.

இவ்வாறானதொரு நிகழ்வு முன்னர் காலியில் நடைபெற்றபோது, வடபகுதியைச் சேர்ந்த 10 வயதிலும் குறைவான 30 சிறுவர்கள் பெற்றோரின் துணையின்றி இந்த நிகழ்வில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (94)

# ஒட்டுசுட்டான் மத்திய மருந்தகம் விரைவில் திறக்கப்பட வேண்டும்

## முத்தையன்கட்டு கிராம உத்தியோகத்தர் தெரிவிப்பு

ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் மருத்துவ வசதியின்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே ஒட்டுசுட்டான் மத்திய மருந்தகம் விரைவில் திறக்கப்பட வேண்டும் என முத்தையன்கட்டு கிராம உத்தியோகத்தர் தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

ஒட்டுசுட்டான் பிரதேசம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இந்தப் பிரதேச வீதிகள் போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு சேதமடைந்து காணப்படுகிறது. இந்த நிலையில் இங்குள்ள மக்கள் மருத்துவ வசதியைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கருத்திற்கொண்டு இந்த மருந்தகத்தை துரிதமாகப் புனரமைப்பதுடன், இந்தப் பிரதேச மக்களின் நன்மை கருதி இங்கு பிரசவ விடுதி ஒன்றையும் அமைத்து அவர்களுக்கு உதவ நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னார் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் இரண்டு மாடிக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது

மன்னார்—

மன்னார் - ஆண்டான்குளம் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு மாடிகளைக் கொண்ட புதிய வகுப்பறைக் கட்டடம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் வில்வராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலையின்புதிய பெயர்ப் பலகையை மாவட்ட நிகொட் திட்டப் பணிப்பாளர் லங்காநேசன் திரைநீக்கம் செய்துவைத்தார். தொடர்ந்து மாவட்ட அரச அதிபர் வே.விஸ்வலிங்கம், வலயக் கல்விப் பணிப்பாளர், மடு வலயக் கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரம், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், மன்னார் மாவட்ட தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் ஒளிவளவன், மன்னார் உதவி நிகொட் திட்டப் பணிப்பாளர் இராசரத்தினம் ஆகியோர் வகுப்பறைகளை நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு விடுதி அமைப்பதற்கு முள்ளியவளையில் அடிக்கல் நாட்டப்பட்டது

முள்ளியவளை—

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சிறுவர் நலன் திட்டப் பிரிவினரால் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 250 பாடசாலை மாணவர்களுக்கான விடுதி ஒன்று அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதிப் பங்களிப்புடன் நிறுவப்படவுள்ள இந்த மாணவர் விடுதிக்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் முள்ளியவளைப் பிரதேசத்தில் இடம்பெற்றது.

இந்த அடிக்கல் நாட்டுவிழா தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சிறுவர்நலன் திட்டப் பிரிவின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் ரவி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சண்முகரட்ணம் அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

## வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில்

# பாடசாலை மாணவர்களின் இடைவிலகல் அதிகரிப்பு

ஆழியவளை—

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக பாடசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பிரதேச பாடசாலைகளிலிருந்து கடந்த ஐந்து மாதங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இடைவிலகியுள்ளதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இடைவிலகியுள்ள மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைக்கும் நடவடிக்கையில் பாடசாலை நிர்வாகிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏற்கனவே போர் நடவடிக்கை, மற்றும் இடப்பெயர்வு, வறுமை போன்ற பல்வேறு காரணங்களால் பல மாணவர்கள் இப்பிரதேசப் பாடசாலைகளிலிருந்து இடைவிலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுனாமி அனர்த்தத்தில் தமது உறவுகளை இழந்து நிர்க்கதியாகியுள்ள பல மாணவர்கள் பாடசாலைக் கல்வியைத் தொடர்வதில் விருப்பமின்மை கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)

## மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

முழங்காவில்—

முழங்காவில் பிரதேச மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும், வீரமுரசு நிகழ்வும் இன்று முழங்காவில் மாவீரர் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர். (நா)

# சமாதானமும் அபிவிருத்திக்குமான நிகழ்ச்சியில் மூவின மக்களும் பங்கேற்பு

வவுனியா—

சமாதானமும் அபிவிருத்திக்குமான நிகழ்ச்சித்திட்ட நிகழ்வு அண்மையில் வவுனியா ஈரற்பெரியகுளம் முன்பள்ளியில் இடம் பெற்றது.

CHA நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட இந்த நிகழ்வில் - தமிழ், முஸ்லிம், சிங்கள சிறுவர்களும், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், என மூவின மக்களும், மதகுருமார்கள், முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர், கிராம சேவை உத்தியோகத்தர், வலய பிரதேச இணைப்பாளர்கள், ஏனைய பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

## சிப்பாய் காயம்

வவுனியா—

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 8.15 மணியளவில் இடம்பெற்றது.

# கராத்தே சுற்றுப் போட்டி



கிளிநொச்சி—

காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லம், புனித பூமி சிறுவர் இல்ல மாணவர்கள் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கராத்தே வீரர்களுக்கிடையிலான கராத்தே சுற்றுப் போட்டி நிகழ்வொன்று காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்ல வளாகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றது.

கராத்தே ஆசிரியர் வள்ளுவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு பிரதம நடுவராக தமிழீழ கராத்தே சங்கத் தலைவர் சோதி மாஸ்ரர் கலந்து கொண்டார்.

இந்தக் கராத்தே சுற்றுப் போட்டியில் 100 இற்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஜூன் - 15

1502: கொலம்பசினால் ஒரு புதிய தீவாக மார்ட்டினிக் தீவு கண்டுபிடிக்கப்பட்டது. செயிண்ட் மார்ட்டின் நினைவு நாளாக இருந்ததனால், இத்தீவுக்கு அவர் மார்ட்டினிக் தீவு எனப் பெயர் சூட்டினார்.

1572: பெஞ்சமிங் பிராங்ளின், மின்னல் என்பது மின்சாரம் தான் என்பதை காற்றாடிப் பரிசோதனை மூலம் மெய்ப்பித்தார்.

1836: அரக்கன் சால் அமெரிக்காவின் 25ஆவது மாநிலமாக இணைந்தது.

1851: உலகின் முதலாவது (ஐஸ்கிறீம்) குளிர்களித் தொழிற்சாலையை பால்டிமோரில் ஃபஸ்ஸல் என்பவர் நிறுவினார்.

1866: சாம்ராஜ்யம் ஒன்றை அமைக்கவேண்டும் என்ற நோக்கோடு பிரஸ்யாவால் ஆஸ்திரியா மீது போர் தொடுக்கப்பட்டது. இப்போர் ஏழு வாரங்கள் நீடித்தது.

1890: பத்திரிகையில் முதலாவது சினிமா விமர்சனம் வந்தது. தவிடோ ஜோன்ஸ் என்ற சினிமாப் படத்தில் இடம்பெற்ற ஒரு முத்தக் காட்சி பற்றியே.இக்காட்சி மிக ஆபாசமாகவும், அருவருக்கத்தக்கதாகவும் இருந்தது என்று எழுதியதே முதலாவது சினிமா விமர்சனமாக அமைந்தது.

1904: ரஷ்யா - ஜப்பான் போரில் டெலிஸ்ஸா என்ற இடத்தில் நடந்த சண்டையில் ஜப்பான் ரஷ்யாவை வெற்றி கொண்டது.

✪ : அமெரிக்காவில் ஹட்சன் ஆற்றில் எஸ்.எஸ். ஜெனரல் ஸ்லோகம் என்ற கப்பல் தீப்பற்றி எரிந்த நாள். இதில் பெண்கள் , குழந்தைகள் உட்பட 1030 பேர் மாண்டனர்.

1905: மனித மூளையில் பொட்டுமடல் பகுதியில் ஏற்படும் பாதிப்பின் விளைவுகள் பற்றி விபரித்தவரும், உலகப்புகழ் பெற்ற நரம்பியலாளரும், உளவியலாளருமான ஜேர்மனியைச் சேர்ந்த கார்ல் வெர்னிக்டர் பெர்க் மரணமடைந்தார்.

1907: இரண்டாவது சர்வதேச சமாதான மாநாடு ஹேக் நகரில் ஆரம்பமானது. ஒக்ரோபர் 18 வரை நடைபெற்ற இந்த மாநாட்டில், ஆயுத உற்பத்திகளைக் குறைப்பதற்கு ஜேர்மனி ஒத்துக் கொள்ளவில்லை.

1917: ஹெயிட்டி, ஜேர்மனியுடன் இராஜதந்திர உறவை முறித்துக் கொண்டது.

✪ : அமெரிக்க காங்கிரஸ் நான்கு வட ஐரோப்பிய நாடுகளுக்கு பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்குத் தடைவிதித்தது.

✪ : ஜேர்மனி இரகசியமான முறையில் இத்தாலியுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ள அழைப்பு விடுத்ததாக இத்தாலியப் பிரதம மந்திரி நாடாளுமன்றில் தெரிவித்தார்.

1947: ரஷ்யா தனது முதலாவது அணுகுண்டுப் பரிசோதனையை சைபீரியாவில் நடத்தியது.

1969: ரொடீசியாவில் நடந்த பொது வாக்குக் கணிப்பில், புதிய அரசியல் சட்டத்தின்படி குடியரசு அமைப்பதற்குப் பெருமளவிலான மக்கள் ஆதரவளித்தனர்.

1971: அமெரிக்க உயிரியல் விஞ்ஞானியும், வைரஸ் கிருமிகள் பற்றி நடத்திய ஆய்வுகளுக்காக 1946ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றவருமான வென்டல் மெரிடித் ஸ்டான்லி காலமானார்.

1984: இராணுவத்தினரின் கடல் விமானம் ஒன்று காரைநகர் பருத்தியடைப்பு பகுதியில் வைத்துத் தகர்க்கப்பட்டது.

1992: கடந்த நான்காம் திகதி முதல் பிரேசில் ரியோ டி ஜானெய்ரோவில் நடைபெற்றுவந்த ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுப் புறச் சூழல் அபிவிருத்தி மாநாடு நிறைவெய்திய நாள். சுற்றுப் புறச் சூழலைப் பாதுகாக்கவும், அபிவிருத்தி செய்யவும் வழிவகுப்பதான ரியோ பிரகடனம் வெளியிடப்பட்டது. இந்தப் பிரகடனத்தை 178நாடுகள் ஏற்றுக்கொண்டன.

1993: கனடாவில் முதல் பெண் பிரதமராக கொன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த கிம் காம் பெல் பதவியேற்றது.

✪ : துருக்கியில் முதலாவது பெண் பிரதமராக திருமதி தான்ஸ் சில்ஃப் பதவியேற்றது.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
மயிர்நீர்ப்பின் வாழாக் கவரிமா னன்னார்
உயிர்நீர்ப்பர் மானம் வரின்
திருக்குறள்

# நமது நோக்கு

## தமிழர் உரிமைகளை நிராகரிக்கும் சிங்கள பௌத்த தார்மீகம்...!

நேற்று முன்தினம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்கும் ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கு எதிராகவும், அத்தகைய முயற்சியை முற்றாகக் கைவிடக் கோரியும் தென்பகுதி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும், தேசிய பிக்குகள் முன்னணி, ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றைச் சேர்ந்த பிக்குமார்களும் ஏனைய பேரினவாதிகளும் இணைந்து கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி - பொலிஸார் மேற்கொண்ட கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல் மற்றும் நீர்ப்பீரங்கித் தாக்குதல் போன்றவற்றால் இடையில் கைவிட்டு விடும் சூழ்நிலை ஏற்பட்டது. ஆர்ப்பாட்டப் பேரணியை முன்னின்று நடத்திய அனைத்துத் தரப்பினருக்கும் ஏமாற்றம் அளித்த ஒன்றாகவே அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஜனாதிபதி - மிகவும் உணர்ச்சிகரமான விவகாரமாக்க ஜே.வி.பியினரும் ஹெல உறுமய பிக்குகளும் கடுமையாக முயன்றுவரும் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான விவகாரத்தை எதிர்கொள்ள எடுக்கத் தொடங்கியுள்ள நடவடிக்கைகளின் ஆரம்பம் அவர்களால் விரும்பத்தகாததொன்றாகவே அமையும் என அவர்கள் எண்ணியிருக்கவே மாட்டார்கள்.

தொலைக்காட்சி செய்திகளில் - பொலிஸார் ஆர்ப்பாட்டககாரர்கள் ஜனாதிபதி மாளிகையை நோக்கி முன்னேற முயன்றபோது அதனைத் தடுத்துநிறுத்த கையாண்ட அணுகுமுறைகள், கலகக்காரர்களை அடக்க அல்லது கலைக்க கையாளும் நடைமுறைகளுக்கு இணையாகவே இருந்ததைத் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது.

அதுமட்டுமல்ல, பேரணியில் கலந்துகொண்டோரை கலைந்து செல்லுமாறு பொலிஸார் கூறும்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பாக பௌத்த பிக்குகள் அவர்களுடன் நடந்துகொண்டவிதம் அல்லது உரையாடிய விதம் அரசியல் நாகரிகமற்ற மூன்றாந்தர அரசியல்வாதிகளின் 'ரௌடித்தனமான' அணுகுமுறையாகத் தென்பட்டதால், பொலிஸார் அவர்கள்மீது மேற்கொண்ட கண்ணீர்ப்புகை மற்றும் நீர்ப்பீரங்கித் தாக்குதல்களை எவரும் பிழையான ஒன்றாகக் கருதவில்லை என்பதும் உண்மையாகும்.

அமைதி, சாந்தம், கருணை மற்றும் சமாதானம் உட்பட பௌத்த கோட்பாடுகளை கடைப்பிடித்து நாட்டில் சகல மக்களும் சகோதரத்துவத்துடன் வாழ வழிகாட்டவேண்டிய பிக்குகள், வன்முறை மற்றும் நீதிக்கும் நேர்மைக்கும் மட்டுமல்ல, மனித நேயத்துக்கும்கூட எதிரான செயற்பாடுகளும் இளைஞர்களை - மாணவ சமூகத்தை வழிநடத்திச் செல்ல குரூர வேகம் கொண்டு நின்றதை தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தெட்டத்தெளிவாகக் காட்டின.

இதனை நாம் மட்டும் சொல்லவில்லை. பண்டாரநாயக்கா பரம்பரையின் கடைசி வாரிசு என்று கூறப்படும் - ஏன் தன்னைத்தானே பிரகடனம் செய்து கொள்ளும் ஜனாதிபதியின் சகோதரரான அனுர பண்டாரநாயக்க, இந்த யுத்த சன்னதப் பிக்குகளை நோக்கி அதேநாளில் பொதுக்கூட்டமொன்றில் வைத்து கேட்ட சில கேள்விகள், இந்த அரசியல்வாதிகளான பிக்குகள் குறித்து அவர்கள் என்ன கருத்து நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார்கள் என்பதை தெளிவுபடுத்தப் போதுமானதாகும்.

அரசியல் இலாபங்களுக்காக பட்டினிகிடக்கும் அதுவும் பொய்யாகப் பட்டினி கிடக்கும் இந்தப் பிக்குகள், பொதுக்கட்டமைப்புக்கு எதிராக உண்ணாவிரதம் இருப்பதைவிட்டு வடக்குக்குச் சென்று யுத்தம் புரியவேண்டும் என்று கோரிக்கை விடுத்த அவர் - பொதுக்கட்டமைப்புக்கு எதிராக உண்ணாவிரதம் இருக்கும் ஓமல்பே சோபித தேரர் மற்றும் அத்துரலியே ரத்னதேரர் போன்றவர்கள் நாட்டுக்காக எதையாவது - ஏன் ஒரு மயிரைத்தானும் தியாகம் செய்துள்ளார்களா? எனவும் கேட்டுள்ளார்.

இதுபோதும். இன்று இனவெறியும் மதவெறியும் தலைக்கேறிய நிலையில் தேசிய பிக்குகள் முன்னணி மற்றும் ஹெல உறுமய அமைப்புக்களைச் சேர்ந்த பிக்குகளின் நோக்கத்தையும் செயற்பாடுகளின் போலித்தனத்தையும் புரிந்து கொள்வதற்கு...

இதனைவைத்து, அனுர ஏதோ நேர்மையானவர் என்று அர்த்தம் கொண்டுவிடக்கூடாது. பிக்குகளைச் சாடும் அவரால், அவர்களைப் போன்று இன்னும் சொல்வதானால் அதனைவிட மகாமோசமாகவும் செயற்படும் தனது ஜே.வி.பி தோழர்களை நோக்கி கடுமையாக எதனையும் சொல்லவில்லையே...!

எதுவானாலும் பேரினவாதத் தலைமைகளிடையே, பௌத்த மதவாதபீடத்தவர்களிடையே இப்போது பொதுக்கட்டமைப்பு என்ற அற்பவிடயம் தொடர்பாக எழுந்துள்ள மோதல் முரண்பாட்டு நிலையானது - தமிழர்களின் எந்தவொரு பிரச்சினைக்கும் ஒருமித்த நியாயமான, உறுதியான கருத்து நிலைப்பாட்டில் நின்று தீர்வுகாணும் தார்மீக சிந்தை இவர்களுக்கு எந்தக் காலத்திலும் வரப்போவது கிடையாது என்ற செய்தியை ஓங்கி உலகுக்கு அறிவிக்க ஆரம்பித்துவிட்டது என்பதுமட்டும் தெளிவான உண்மையாகும்.

இலங்கையின் இன்றைய பௌத்த தர்மம் தமிழர்கள் விடயத்தில் நியாயமாக நடக்கப்போவதில்லை என்பதையே பொதுக்கட்டமைப்புக்கு எதிரான போராட்டங்கள் வலியுறுத்தி நிற்கின்றன.

# நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# புலிகளுடன் ஒத்துப்போக மறுத்தால் சர்வதேச சமூகம் தலையிட முடியும்!

பொதுக்கட்டமைப்பில் அரசாங்கம் கைச்சாத்திடத்தான் போகிறது. அது செயற்படவும் போகிறது. ஜே.வி.பி. கூட்டாட்சியிலிருந்து விலகினாலும் ஆட்சி கவிழாது. அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி உதவி செய்யாது. பொதுக்கட்டமைப்பினால் ஆட்சியைக் கவிழ்க்க முனைந்தால் தமிழர் கூட்டமைப்பு மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவையும் எதிர்த்தே நிற்கின்றன என்பதைச் சொல்லத் தேவையில்லை. என்று சொல்லியபடியே வந் தார் பரமசிவம்.

ஜே.வி.பி யினரின் ஆர்ப்பாட்டம், ஹெல உறுமய பிக்குகளின் பட்டினிப் போர் இவற்றுக்கிடையே ஜே.வி.பியின் தூண்டுதலால் கிளம்பும் மாணவர் போராட்டம் இவையெல்லாம் நாட்டில் குழப்பத்தையே ஏற்படுத்தி அமைதி இன்மையைத் தோற்றுவிக்காதா? ஏற்கனவே வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாமல் திண்டாடும் மக்களின் நிலை என்ன என்று கேட்டேன் நான்.

தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை. பொதுக்கட்டமைப்பை சாட்டாக வைத்து இனத்துவேசத்தை கிளப்பி விட்டால் மக்கள் அதில் மூழ்கி விடுவார்கள் என்பது ஜே.வி.பிக்குத் தெரியும். ஹெல உறுமயவுக்கு இனவாதக் கூச்சல் போதும்! ஆனால் சந்திரிகா அம்மையாரின் சுயரூபம் இனித்தான் தெரியும் என்றார் பரமசிவம்.

கணவனைக் கொலை செய்தவர்கள் ஜே.வி.பியினர், அப்பனைக் கொன்றவர்கள் புத்தபிக்குகள். இவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து - புலிகள் கொல்கிறார்கள், அவர்கள் கொலை காரர்கள் என்று நெடுக ஓலமிட்டுக் கொண்டிருப்பதை எத்தனை நாளைக்குத் தான் பொறுத்துக் கொண்டிருப்பார்? இதனால் தான் போரினால் தான் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டுமென்று எப்போதும் சிந்திக்கக் கூடாது. பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணவேண்டுமென்று சிந்திக்க வேண்டும்.

தமிழ் மக்களின் உரிமைகளைக்கொடுக்க மறுத்ததால்தான் விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தினார்கள் என்று மறக்கக் கூடாது என்றும் சந்திரிகா அம்மையார் இப்போது சுட்டிக் காட்டியிருக்கிறார் என்றேன்.

கடந்த 11 ஆண்டுகளாக நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதியாக இருந்தும் நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியவில்லை. பழைய இனவாதப் போக்கிலேயே அவரும் அதிகாரத்தை அனுபவித்தார். இப்போது தனது அதிகாரம் முடிவடையும் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வைக் காண முடியவில்லை. இயற்கை அழிவினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உலக நாடுகள் கொடுத்த உதவியை பகிர்ந்தளிக்க முடியவில்லை என்றால் உலகம் பழிக்காதா? என்ற நிலைக்கு சந்திரிகா அம்மையார் வந்துவிட்டார். இதுவரை ஏனோ தானோ என்று ஆட்சி அதிகாரத்தை அனுபவித்தாயிற்று. இனியும் நாட்டு மக்கள் அனைவரையும் பற்றி சிந்திக்காவிட்டால் தமது பரம்பரைக்கே இழுக்கு என்று நினைத்துவிட்டார் போலும்.

ஜே.வி.பியின் மிரட்டலுக்கும், புத்தபிக்குகளின் பயமுறுத்தலுக்கும் இனிப் பணிவதில்லை என்று முடிவு செய்து விட்டார். இனி அவருக்கு உலக நாடுகளும் உதவிக்குவரத் தயாராக இருக்கின்றன. உள்நாட்டிலும் உதவி பெருகும் என்றார் பரமசிவம்.

பொதுக்கட்டமைப்பு நிறைவேற்றப்படும். இது தொடர்ந்து நிறுத்தப்பட்டிருக்கும் இனப்பிரச்சினைக்கான சமாதானப் பேச்சுத் தொடரும். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கும் சம்மதிப்பார் என்றேன்.

இனி நேரடி மிரட்டல் சரிவராது என்பதை உணர்ந்த ஜே.வி.பியும் மற்றைய இனவாதிகளும் இனி இஸ்லாமியர்களை தூண்டிவிடவும் எங்களையும் சேர்த்துக் கொண்டிருக்கின்றோம் என்ற சங்கரி - டக்ளஸ் கம்பனிகளை குழப்பத்துக்குத் தூண்டி விடவும் தொடங்குவார்கள் என்று பரமசிவம் சொன்னார்.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டால் நாடு பிளவுபடும் என்று சொல்பவர்களுக்கு இப்போது நாடு பிளவுபட்டிருக்கிறது என்பது தெரியாதா? வடக்கிலும் - கிழக்கிலும் குறிப்பிடக்கூடிய பகுதிகளில் விடுதலைப் புலிகளின் நேரடி நிர்வாகம் இருக்கிறது. வடக்கு - கிழக்கின் இதர பகுதிகளுக்கும் மறைமுகமாக புலிகளின் கட்டுப்பாடு இருக்கிறது. அரசாங்க அதிகாரிகள் அவர்களின் கட்டுப்பாட்டில்தானே வேலை செய்கிறார்கள். யாழ்ப்பாணத்துக்கு ஜே.வி.பி அமைச்சர்கள் போனபோது அவர்கள் அங்கு எதிர்ப்புக் காட்டவில்லையா? புலிகளின் எதிர்ப்பு இருக்குமானால் வடக்குக்கும் - கிழக்குக்கும் அரசாங்க அமைச்சர்கள் எவராவது போகமுடியுமா? என்று ஆர்.எம்.பி. சேனநாயக்க என்பவர் ஒரு கட்டுரையில் கேட்டிருக்கிறார். இதுமட்டுமல்ல, நாங்கள் விடுதலைப் புலிகளுடன் விட்டுக் கொடுத்து ஒத்துப் போகாவிட்டால் என்ன நடக்கும்? எங்களைப் போன்றுதான் சேர்பியர்களும் கொசோவோ மக்களுக்கு சுயநிர்ணய உரிமை கொடுக்க மறுத்து வந்தார்கள். இப்போது கொசோவோ மக்களுக்கு சுதந்திரம் வழங்க ஐரோப்பிய ஒன்றியம் தயாராகிக் கொண்டிருக்கிறது. நாங்கள் விடுதலைப் புலிகளுடன் ஒத்துப் போக மறுத்தால் அவர்களுக்கு இடம் கொடுக்க மறுத்தால் சர்வதேச சமூகம் என்ன செய்யும்?

தேசிய சுயநிர்ணயத்துக்கு சர்வதேச சமூகம் கொடுத்த மதிப்பு காலம் போய்விட்டது. ஓர் அரசு தமது மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பைத் தட்டிக் கழித்து நிறைவேற்றத் தவறினால், அந்த மக்களைப் பாதுகாப்பதற்கு சர்வதேச சமூகத்துக்கு உரிமை மட்டுமல்ல பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் இருக்கிறது என்பது ஐ.நா சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதுதான் இன்றைய நிலை என்றும் ஆர்.எம்.பி.சேனநாயக்க ஐலன்ட் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் எடுத்துக் காட்டியிருக்கிறார். இதற்கு உதாரணமாக றுவாண்டா நாட்டையும் சுட்டிக் காட்டியிருக்கிறார் என்று நான் சொன்னேன்.

இதெல்லாம் சந்திரிகா புத்தபிக்குகளுக்கு பணிய மறுத்த பிறகுதான் வெளிவரத் தொடங்கியிருக்கிறதென்று சொன்னபடி நடந்தார் பரமசிவம்.

# வாசகர் நோக்கு

## இடநெருக்கடி நீங்குமா?

யாழ். நகரில் ஸ்ரான்லி வீதியில் (ஸ்ரீதர் பட அரங்கிற்கு பக்கத்தில்) உள்ள புகையிரதக் கடவையில் அடிக்கடி இடநெரிசல் ஏற்பட்டு மக்களும், வாகனங்களும் பெரும் இடர்பாட்டுக்குள்ளாகின்றனர்.

இந்த இடத்திலுள்ள சிறிய பழைய கட்டடமும், வீதியின் இருபுறமும் நாட்டப்பட்டுள்ள இரும்புத் தூண்களுமே இந்த இடநெருக்கடிக்குக் காரணமாகும்.

அதிகளவான வாகனங்களும், மக்களும் அதிவேகமாக இந்த வீதியூடாகப் பயணிப்பதால், இந்த இடத்தில் பெரும் இட நெருக்கடியும், விபத்துக்களும் அடிக்கடி ஏற்படுவது தவிர்க்கவோ, தடுக்கவோ முடியாததாகவுள்ளது.

புகையிரதக் கடவையில் பொருத்தப்பட்டிருந்த இரும்புக் கதவின் அளவுக்கு வீதி ஒடுக்கப்பட்டமையும், அந்த இடத்தில் ஒடுக்கமான வீதியாக அமைந்துவிட்டமைக்கு ஒரு காரணம்.

சம்பந்தப்பட்டோர் இவற்றை அகற்றி சீரான வீதிப் போக்குவரத்துக்கு உதவுவார்களா?

யாழ்ப்பாணம் - எஸ்.முருகையா

- கலையியல் -

- காவலூர்.விஜேந்திரன் -



# தூரிகை கொண்டு துயர நிகழ்வை வெளிக்கொண்டுவரும் இளம் ஓவியர்கள்

நேற்றைய தொடர்ச்சி......

தூரிகை அசைவுகளால் ஒலியின் பண்புகளை உணர்த்துதல் முதலிய பல நுட்பவியல்கள் நல்ல ஓவியத்தின் பரிமாணங்களாவுள்ளன.

இந்த வாக்கியப் பொருத்தப்பாடுகளுக்கு அமைவாக தாம் இளம் கலைஞர்கள், தொடர்ந்து ஓவியத்துறையில் கற்றுவரும் மாணவர்கள் என்பதை பொய்ப்பிக்கும் வகையில், இந்தக் கண்காட்சியானது இடம்பெற்றதும், இடம் பெறவுள்ளமையும் குறிப்பிடப்பட வேண்டியது.


கலா முற்றத்தில் கடல் வரைந்த ஓவியங்களின் கண்காட்சியானது பெருமளவு மாணவர்கள் ஓவியத்துறை சார்பானவர்கள், ஆர்வலர்கள் எனப் பலரும் பார்த்து வியந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஒவ்வொருவருமே தமது சக்திக்கு அப்பால் உழைத்து, அதில் வெற்றியும் கண்டுள்ளனர் என்பது அனுபவரீதியாக உணர முடிந்தது.

அன்ரன்ராஜ் வெஸ்லி, ஜூட்சன், சுபசிறி ஜெயந்த ஜெயசிறி, இராஜரட்ணம் - வித்தியானந்தன், ஆரோக்கிய நாதர் - தீபன் திலீசன், ரமேஸ் - பிரகாஸ், சுந்தரம்பிள்ளை - ரகுராகவன், சரவணபவன் - சாருபா, சத்தியசீலன் - ஜெயவாணி, ஆரோக்கியநாதர் டிறோசினி பரீனா, யேசுதாஸன் - மேரி டியூலா, ஞானானந்தன் - சிந்துஜா, பேரின்பநாதன் - ஹம்சத்வனி ஆகிய இளம் ஓவியர்களே தம் பதிவுகளை எம்முன் கொண்டு வந்துள்ளனர்.

சிலர் மிகத் திறமையாக வரைந்துள்ளனர். மிக நேர்த்தியாக, அதேநேரம் அவலத்தை அழகாக வெளிப்படுத்தியவர்களில் ரமேஸ் - பிரகாஸ், சுந்தரம்பிள்ளை - ரகுராகவன், அன்ரன்ராஜ் வெஸ்லி ஜூட்சன் குறிப்பிடும்படியானவர்கள். சுனாமிப் பேரலைக்கு இடையே தேவாலயத்தைச் சித்தரித்து, பேரலையின் எச்சங்களை (வலை, பாட்டா, மரம்) ஓவியத்துடன் இணைத்துக் காட்சிப்படுத்தியுள்ளமை பாராட்டப்பட வேண்டியது. (ஜூட்சன்)

ரகுராகவனின் ஓவியம் நம்மை தென்பகுதி கடற்கரைக்கு அழைத்துச் செல்வதான சித்தரிப்புகள் உள்ளது. உயர்ந்த கட்டட இடிபாடுகள், பெரிய கடற்கலங்களின் சிதைவு, மிக நெருக்கமான குடிமனைகள் என இவரது படைப்புள்ளது. அழிவுகளை மிக அவதானமாகப் பதிவுசெய்துள்ளபோதிலும், இந்த ஓவியத்துக்கான பாதிப்பு யாழ்ப்பாணத்திலோ, முல்லைத்தீவிலோ இடம் பெறவில்லை.

சுனாமி அழிவுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எங்கள் பங்களிப்பு என்ன...? இந்தச் சிந்தனை வெளிப்பாடாகவும் இவர்களது படைப்புகள் இருக்கலாம். அழிவுகளையும், அவலங்களையும் பதிவுசெய்து, காட்சிப்படுத்தி, அதனைக் காலப் பதிவாக மாற்ற நினைத்துள்ளதுடன், அவற்றைச் செயற்படுத்தி வருகின்றமை வரலாற்றுத் தேவை மட்டுமன்றி, வரலாற்றுக்கு அழகு வடிவம் கொடுத்துள்ள நிகழ்வென்றால் அது மிகையாகாது.



கடல் வரைந்த ஓவியத்தை மீண்டும் தாம் வரைந்து, கடல் வரைந்த ஓவியக் கண்காட்சியாகக் காட்சிப்படுத்தி வருகின்றமை பாராட்டப்பட வேண்டியது.

அரசியற்கட்டுரை

- சுடரவன் -

# நான்காம் கட்ட ஈழப்போர் பலமும் படையுத்தியும்!

போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை, சமஷ்டி இடைக்கால நிர்வாகம் என கடந்த மூன்று ஆண்டுகளாக மக்கள் மனங்களை நிறைத்திருந்த சமாதான மாயை படிப்படியாக விலகி மீண்டுமொரு யுத்த சூழல் விரைவாக, உருவாகி வருகிறது.

சிங்களப் பேரின்வாதத்தால் தாம் மற்றுமொரு தடவை ஏமாற்றப்பட்ட உணர்வு - தமிழ் மக்கள் மத்தியில் ஆழப்பதிய ஆரம்பித்துவிட்டது. தீவிரமடைந்துள்ள இலங்கை படைத்தரப்பின் மறைமுக மற்றும் நேரடி நடவடிக்கைகள் தமிழர் தரப்பை யுத்தத்துக்கு வலிந்திழுக்கும் நடவடிக்கையே என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. இந்தப் புறச் சூழ்நிலையில் யுத்தம் தவிர்க்கப்படக் கூடிய கட்டத்தைத் தாண்டிவிட்டதாகவே தோன்றுகிறது. பல்வேறு கட்டங்களாகப் பிரித்து நோக்கப்படும் தமிழீழ விடுதலைப் போர் - பொதுவாக ஈழப்போர் என பல தரப்பினராலும் குறிப்பிடப்படுகிறது. ஈழப்போர் இதுவரை மூன்று கட்டங்களாக அதாவது ஈழப்போர் -1, ஈழப்போர் - 2, ஈழப்போர் - 3, என நடைபெற்றுள்ளதாகக் கொள்ளப்படுகிறது. இனிவர இருப்பது ஈழப்போர் - 4!

ஈழப்போர் கடந்து வந்த ஒவ்வொரு கால கட்டத்தையும் ஆராயும் போது, ஒவ்வொரு கால கட்டத்திலும் இலங்கை படைத்தரப்புடன் ஒப்பிடும் போது தமிழர் தரப்புப் பலம் மேலோங்கிச் சென்றுள்ளதைக் கண்டு கொள்ள முடிகிறது. ஒவ்வொரு காலகட்டத்திலும் இலங்கை படைத்தரப்பு தன் படைத்துறைக் கட்டுமானத்தை ஆள் ஆயுத ரீதியில் அதிகரித்த போதும், நவீன தொழில் நுட்பம் போரியல் உத்திகளைப் பயன்படுத்திய போதும், தமிழர் தரப்பு வலுவாற்றலை முறியடித்து வெற்றி கொள்ள முடியவில்லை. மாறாக தமிழர் தரப்பின் போரியல் உத்திகள் ஆயுதக் கையாள்கை என்பவற்றால், இலங்கை படைத்துறையின் வலு சிதறடிக்கப்பட்டுள்ளது.

எது எப்படியிருப்பினும், இலங்கை அரசும் - படைத்துறையினரும் யுத்தத்தை முன்னெடுக்க முடிவெடுத்துவிட்டார்கள் என்பது திண்ணம். ஆனால் தமிழர் தரப்புடனான இந்த நான்காம் கட்ட ஈழப்போரை அவர்கள் எவ்வாறு நகர்த்தப் போகின்றனர் என்பதே சிந்திக்க வேண்டிய விடயமாகிறது.

ஜெயசிக்குறு போன்ற பெருமெடுப்பிலான நடவடிக்கைகளை மீண்டும் முன்னெடுக்க படைத்தரப்பு உடனடியாக முயலாது என நம்பலாம். கடந்த காலத்தில் பெற்ற கசப்பான பாடங்களை அவர்கள் அவ்வளவு இலகுவில் மறந்திருக்க மாட்டார்கள். அத்துடன் ஒரு காலத்தில் புலிகளிடம் நீண்ட வீச்சு பிரதேசப் படைக் கலங்கள் **(Longe range area weapons)** இல்லாத அல்லது குறைவாக இருந்த காலகட்டத்தில் இவ்வகையான நடவடிக்கைகள் சில வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்திருந்தாலும், தற்போது பற்றறிக் கணக்கு **(Battery)** வளர்ந்துள்ள தமிழர் தரப்பின் மோட்டார் ஆட்லறி பலம் என்பவற்றின் முன் பெருமெடுப்பு நடவடிக்கைகளின் வெற்றி இலகுவான விடயமாக இருக்கப் போவதில்லை. மேலும் 85 ஆயிரம் படையினர் படையை விட்டோடியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், படையினரின் இத்தகைய நடவடிக்கைக்கான சாத்தியப்பாடு மேலும் வலுவிழக்கின்றது. இவ்வாறு நோக்கும் போது - தமிழர் தரப்பின் வலுநிலைத் தளப் பிரதேசம் நோக்கிய பாரிய படைநடவடிக்கைகளுக்கான உடனடிச் சாத்தியப்பாடு மிகக் குறைவானதே.



படைத்தரப்பைப் பொறுத்த வரை இந்தமுறை தென்தமிழீழப் பகுதியிலேயே அவர்களது படைநடவடிக்கைகள் பெருமளவு இடம்பெறும் சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. இலங்கைப் படைத்துறை மூலோபாய வகுப்பாளர்களின் கருத்துப்படி, கிழக்கை கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவருதல் என்பது மிக முக்கியமான விடயமாகவே கருதப்பட்டு வந்துள்ளது. (எனினும் இலங்கையின் படைத்துறை நடவடிக்கைகள் படைத்துறை நோக்கிற்கு அப்பாற்பட்டதாக அரசியல் இலாப நோக்கில் முன்னெடுக்கப்படுவது மிகவும் பரிதாபகரமானது என மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டிருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது) இலங்கை படைத்துறை மூலோபாயக் குறிப்புக்களை நோக்கும்போது, கிழக்கை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, அதை வடக்கிலிருந்து பிரிப்பதற்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொள்ள முடியும்.

**"If east deprived to the L.T.T.E eelam concept is killed**

**Jaffna / wanni are generally considered to be the head of the problem the heart lies in east**

**Alternative strategy by SL Army"**

இதன் அடிப்படையில் நோக்கும் போது தமிழரது தாயகக் கோட்பாட்டை, அவர்களது அபிலாசைகளை இல்லாதொழிப்பதற்கான வழியாக கிழக்கைப் பிரித்தல் என்னும் விடயம் அமைவதுடன் படைத்துறை ரீதியில் தமிழர் தரப்பின் பலத்தை சிதறடிக்கும் தாக்கமான வழிமுறையாகவும் இது அமைகிறது. இந்தத்தடவை இந்த மூலோபாயத்துக்கு இலங்கை அரசும், அதன் படைகளும் முன்னுரிமை கொடுத்துச் செயற்படும் என நம்புவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது.

கருணாவால் கிழக்கில் தோன்றியுள்ள நிலையை படையினர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திவரும் தற்போதைய நிலையை, இந்த மூலோபாயத்தை முன்னெடுப்பது பொருத்தமானதென படைத்தரப்பு கருதலாம். அத்துடன் மட்டக்களப்புப் போலவே திருமலையிலும் படையினர் - ஒட்டுப் படையினரின் துணையுடன் படைச் செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடிய சாத்தியப் பாடுகளும் தென்படுகின்றன. அண்மையில் வெலிக்கந்தப் பகுதியில் கொல்லப்பட்ட ஈ.என்.டி.எல்.எப் குழுவை திருமலைப் பகுதியில் பயன்படுத்தவே இலங்கை படைத்துறை புலனாய்வுப் பிரிவு திட்டமிட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. அத்துடன் தற்போது திருமலையில் தோற்றுவிக்கப்பட்டுள்ள நிலைமைகளையும் இவற்றுடன் தொடர்புபடுத்தியே நாம் நோக்கவேண்டியுள்ளது.


கிழக்குக்குரிய படைத்துறை யுத்திகள் இவ்வாறு வகுக்கப்பட வடக்கில் தமிழர் தரப்பின் வலுநிலைப் படைத்துறைத் தளப் பிரதேசமாக விளங்கும் வன்னிப் பெருநிலப் பரப்பில் நிலைமைகள் வேறு விதமாக அமையலாம்.

முக்கியமாக தமிழர் தரப்பின் தலைமை முக்கிய தளபதிகளைக் குறிவைத்து சிறுகுழு நடவடிக்கைகள் **(Small unit operation)** பரவலாக முன்னெடுக்கப்படலாம். இதில் ஆழ ஊடுருவித் தாக்குதல், பிரதான பங்கைவகிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கை படைத்துறை வரலாற்றில் அதன் டிவிசன்களால் கூடப் பெறமுடியாமல் போன பயன் விளைவுகளை ஆழ ஊடுருவித் தாக்கும் சிறு பிரிவுகள் **Longe range Deep penetration/ L.R.R.P** பெற்றுக் கொடுத்துள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

(தொடரும்...)

# நீதிபதிகளின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் சதாம் குறித்த புதிய ஒளிநாடா வெளியீடு



பாக்தாத் —

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் நீதிபதிகளால் விசாரிக்கப்பட்டுக்கொண்டிருப்பதைக் காட்டுகின்ற, பெரும்பாலும் அவருடைய ஒருவருட கால வாழ்க்கை வரலாறு பற்றிய ஒளிநாடா வெளியாகியுள்ளது.

ஒரு மேசையின் பின்னால் ஒரு கருமையான முழு ஆடையுடன் கழுத்துத் தெரியும் சேட்டுடனும் சதாம் இருப்பதை இந்த ஒளிநாடா காட்டுகின்றது.

தன்மீது நடத்தப்பட்ட கொலை முயற்சியின் பின்னர் 1982 இல் பாக்தாத்தின் வடக்கேயுள்ள சியா முஸ்லிம்களின் கிராமத்தில் நடந்த பல கொலைகள் பற்றிய கேள்விகளுக்கு அவர் பதிலளித்துக்கொண்டிருந்தார்.

வழக்குத் தொடுத்தவர்கள் விரைவில் ஒரு விசாரணையை ஆரம்பிக்க நம்பிக்கை கொண்டுள்ளனர். ஆனால், இன்னும் சதாம் மீதான குற்றச்சாட்டுக்கள் முடிக்கப்படவில்லை.

2003 டிசம்பரில் ஈராக்கில் கைது செய்யப்பட்டதிலிருந்து தங்களுடனான இரண்டு சந்திப்புக்களுக்கு மட்டுமே சதாம் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்று அவருடைய சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

சதாமின் முன்னைய தோற்றம், மற்றும் பிரித்தானியப் பத்திரிகைகளில் வெளியான உள்ளாடைகளுடனான அவரது தோற்றம் ஆகியன வேறுபட்டனவாக இந்த ஒளிநாடாவில் காணப்படுகின்றன. ஒலியின்றி வெளியிடப்பட்டுள்ள அந்த ஒளிநாடாவில் ரெயிட் ஜீசி என நம்பப்படும் சட்டத்தரணியின் கேள்விகளுக்கு விடையளித்துக்கொண்டிருப்பதாக சதாம் காணப்படுகின்றார்.

தனது ஆட்சியின் போது தொடர்ச்சியான படுகொலைகளையும், கொலைகளையும் நடத்தும்படி கட்டளையிட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சதாம், கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது வருத்தத்துடன் சிந்தனையில் மூழ்கியவராகக் காணப்படுகிறார்.

ஒளிநாடா சதாமை மரியாதையுடன் காட்டுகின்றது. ஆனால் கடந்த வருடம் நீதிமன்றில் அவர் காணப்பட்ட அந்தத் தோற்றத்தில் தற்போது இல்லையென பி.பி.சி நிருபர் கூறுகின்றார்.

பாக்தாத் நகருக்கு வடக்கே 40 மைல்கள் தொலைவிலுள்ள டுயாயில் கிராமத்தில் நடந்த டசின் கணக்கான மனிதப் படுகொலைகள் பற்றி அவர் விசாரிக்கப்பட்டுக்கொண்டிருந்தார் என்று ஈராக்கின் விசேட நீதிமன்று கூறியதாக ரொய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

## முதல் பெண் அமைச்சர் குவைத்தில் நியமனம்

குவைத் —

குவைத் நாட்டில் முதன்முதலாக பெண் அமைச்சர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். பெண் உரிமை இயக்கத்தைச் சேர்ந்த மசூமாஅல் முபாரக் என்பவரே திட்டஅமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

குவைத் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்துறை பேராசிரியராக பணியாற்றிய இவர் திட்ட அமைச்சராக இருந்த ஷேக் அகமது அல் அப்துல்லா அல்சபாவுக்குப் பதிலாக புதிய திட்ட அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### சுனாமி தாக்குதலிலிருந்து தப்ப

# செயற்கை மலைகளை உருவாக்க இந்தோனேஷியா திட்டமிட்டுள்ளது

ஜகார்த்தா —

மீண்டும் ஒருமுறை சுனாமிப் பேரலை தாக்கினால், அதிலிருந்து தப்புவதற்காக செயற்கை மலைகளை இந்தோனேஷிய அரசு உருவாக்கத்திட்டமிட்டுள்ளது.

இந்தோனேஷியாவில் சுமத்ரா தீவில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பமும் அதைத் தொடர்ந்து உருவான சுனாமி பேரலையும் அந்த நாட்டில் லட்சக்கணக்கான உயிர்களைப் பலிகொண்டது.

இதனையடுத்து சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகள் மீண்டும் சுனாமி தாக்கினால் அதிலிருந்து தப்பிப்பதற்காக பல்வேறு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கத் திட்டமிட்டுள்ளன.

உலக நோக்கு

இந்தோனேஷியாவில் ஏஸ் மாநிலத்தில் கடலோரப்பகுதிகளில் செயற்கையாக மலைகளை உருவாக்கி, அதில் சீமெந்தைப் பூசி. புற்களை வளர்க்கத் திட்டமிட்டுள்ளனர். சுனாமி ஏற்படப் போகிறது என எச்சரிக்கை வெளியானதும் கடலோர மக்கள் மலையில் ஏறி அதன் உச்சியில் தங்கிவிடலாம். மலை உச்சியில் ஆயிரம் பேர்வரை தங்கி இருக்கலாம்.

செயற்கை மலைகள் தவிர, பூகம்பத்தால் பாதிக்கப்படாத 3 மாடி கட்டடங்களைக் கட்டி சுனாமி உருவாகும் போது அதில் மக்களை தங்கவைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மக்கள் தங்கள் விருப்பம்போல, செயற்கை மலைகளுக்கோ அல்லது பாதுகாப்புக்கட்டடங்களுக்கோ சென்று தங்கிக்கொள்ளலாம்.

இதேவேளை, தாய்லாந்து நாட்டில் தெற்கு கடலோரப் பகுதிகளில் 50 அடி உயர சுனாமி எச்சரிக்கைக் கோபுரங்கள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன. இது சுனாமி பற்றிய எச்சரிக்கையை 6 மொழிகளில் அறிவிக்கும்.

# இந்திய இராணுவ இரகசியம் எதுவும் பாகிஸ்தானுக்கு விற்கப்படவில்லை

### முன்னாள் இராணுவத் தளபதி மறுப்பு

இஸ்லாமாபாத் —

1965இல் இந்திய இராணுவ உயரதிகாரி 50 ஆயிரம் பெற்றுக்கொண்டு முக்கிய இராணுவ ரகசியத்தை விற்றதாக, பாகிஸ்தானின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் கோகர் கான் கூறியிருப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. அதுபோன்ற ஒரு விற்பனை நடைபெறவில்லையென பாகிஸ்தானின் முன்னாள் இராணுவ உயரதிகாரி மறுப்புத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி அயூப்கானின் மகனும், முன்னாள் அமைச்சருமான கோகர் அயூப்கான் பாகிஸ்தானிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு சமீபத்தில் அளித்த பேட்டியில் -இந்திய இராணுவ உயரதிகாரி ஒருவர் தன்னுடைய மனைவியின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக, 1965இல் பாகிஸ்தான் மீது போர் தொடுக்க தயாரிக்கப்பட்டிருந்த முக்கிய இராணுவ ரகசியத்தை ரூ.50 ஆயிரத்திற்கு பாகிஸ்தான் முன்னாள் அதிபர் அயூப் கானுக்கு முகவர் மூலம் விற்றார். அந்த அதிகாரி தற்போது உயிருடன் தான் இருக்கிறார். அவரைப் பற்றிய விபரங்களை நான் எழுதிவரும் சுயசரிதையில் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். சுயசரிதை இந்தாண்டு இறுதியில் வெளிவரும் என தெரிவித்திருந்தார்.

இந்தக் காலகட்டத்தில் பாகிஸ்தான் இராணுவத்தில் அதிகாரியாகப் பணியாற்றிய முன்னாள் இராணுவத் தளபதி மிர்சா அஸ்லாம் பேக் என்பவர் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார். அவர் இது குறித்து இஸ்லாமாபாத்தில் அளித்த பேட்டியில் கூறியதாவது -

இது உண்மையாக இருக்கும் பட்சத்தில், கோகர் கான் வெளியிட்டிருப்பது மிகப்பெரிய விடயமே. ஆனால், அது போன்ற எந்த ஒரு விற்பனையும் நடைபெறவில்லை. பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளிடம் அதுபோன்ற ரகசியம் இருந்ததில்லை.

இந்திய இராணுவ ரகசியம் அப்போது கிடைத்திருந்தால், 1965ல் நடந்த போரில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கும். ஒரு இராணுவ உயரதிகாரி தன்னுடைய மனைவியின் சாதாரண ஆசையை நிறைவேற்றுவதற்கு தேவையான ஒரு அற்பத் தொகைக்காக, நாட்டின் இராணுவ ரகசியத்தையே விற்றார் என்று சொல்வது சுத்தப் பொய்.

கோகர் கான் டெய்ரீஸ் ஒப் த பீல்ட் மார்சல் என்ற தலைப்பில் சுயசரிதை எழுதி வருகிறார். இதுபோன்ற உண்மைக்கு மாறான தகவலை கொடுத்து நாட்டில் சர்ச்சையை ஏற்படுத்தி அதன் மூலம் தன்னுடைய நூலுக்கு விளம்பரம் தேட விரும்பினார். அது தற்போது நிறைவேறியுள்ளது. இவ்வாறு மிர்சா அஸ்லாம் பேக் தெரிவித்துள்ளார்.

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல் 22 பேர் பலி; 50 பேர் வரை படுகாயம்!



பாக்தாத் —

ஈராக்கின் வடபகுதி நகரான கிர்குக்கில் இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 22பேர் உயிரிழந்ததாகவும் 10 சிறுவர்களுட்பட 50 பேர்வரை காயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவர்கள் அனைவரும் அரசாங்க ஊழியர்களெனவும் இவர்கள் அனைவரும் தமது சம்பளத்தைப் பெறுவதற்காக வரிசையில் இந்த நகர வங்கியொன்றின் முன்னால் நின்றவேளையே இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வரிசையில் நின்றதாகக் கருதப்படும் தற்கொலையாளி தனது உடைக்குள் 30 கிலோ நிறையுடைய் குண்டை மறைத்து வைத்து வெடிக்க வைத்திருக்கலாமென பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் பாதைக்கு மேலால் அமைக்கப்பட்ட பாலத்தில் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் இரண்டு கார்களும் தீப்பற்றிக் கொண்டன.

இந்தத் தாக்குதலுக்கு முன்னர் இடம் பெற்ற வெவ்வேறான நான்கு குண்டுத் தாக்குதல்களில் 11 பேர் உயிரிழந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சிலியில் நிலநடுக்கம் எட்டு பேர் உயிரிழப்பு



தென்அமெரிக்க நாடான சிலியின் வடக்குப் பகுதியில் 7.9 ரிக்டர் அளவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் குறைந்தது எண்மர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்டடங்கள் இடிந்து வீழ்ந்ததில் மூவரும், காரில் சென்றுகொண்டிருந்தவேளை மலையிலிருந்து பாறைகள் வீழ்ந்ததில் ஐவரும் உயிரிழந்தனர்.

வடக்குப் பகுதியான இகுனிக்கில் ஏற்பட்ட நில நடுக்கத்தால், அப்பகுதியில் மின் விநியோகம், தொலைத் தொடர்பு அனைத்தும் தடைப்பட்டுள்ளதுடன் பல வீடுகளும் இடிந்து வீழ்ந்துள்ளன.

இந்தப் பகுதிக்கு பொலிஸ், தீயணைப்பு படைப்பிரிவு மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு நிறுவனங்கள் அனைத்தும் சென்றுள்ளதாக ஆப்கானின் தேசிய அவசரகாலப் பணியகம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கம் ஏற்பட்ட போதிலும், சுனாமி பேரலைகள், ஏற்பட வாய்ப்பில்லையெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தப் பகுதியில் ஏற்பட்ட சேத விபரங்களை மதிப்பிடவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் சிலி அரச அதிகாரிகள் குழு சென்றுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோர்ஜி கொரியா தெரிவித்தார்.

# ஆப்கானிஸ்தானில் மோதல் 2 கிளர்ச்சிவாதிகள் பலி

ஆப்கானின் தென்பகுதியில் ஆப்கான் மற்றும் அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப்படைகளுடனான மோதலில் இரண்டு கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டு மேலும் 12 கிளர்ச்சிவாத சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தஅறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இந்தத் தாக்குதல் சம்பவம் ஆப்கானின் தென்பகுதியிலுள்ள கந்தகாரில் இடம்பெற்றது. ஆப்கான் மற்றும் அமெரிக்க கூட்டணிப்படைகள் ரோந்து சென்றுகொண்டிருந்த வேளை குறுகிய பள்ளத்தாக்கினூடாக 15 கிளர்ச்சிவாத சந்தேக நபர்கள் வந்து படையினருடன் திடீரென எதிர்ப்பட்ட வேளை மோதல் ஏற்பட்டது. இதில் 2 கிளர்ச்சிவாத சந்தேக நபர்கள் உயிரிழந்ததுடன் ஒருவர் காயமடைந்தார் மற்றய 12 பேரும் கைது



செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அமெரிக்க இராணுவத் தொடரணி மீது தலிபான் தற்கொலையாளி நடத்திய தற்கொலைத் தாக்குதலில் நான்கு அமெரிக்கப் படையினர் காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கைதான சீனப் பிரஜைகள் கப்பல் மூலம் கொழும்புக்கு!

யாழ்ப்பாணம் ———

யாழ். நகரப் பகுதியில் அனுமதி பெறாது மணிக்கூட்டு வியாபாரத்தில் ஈடுபட்ட போது கைது செய்யப்பட்ட ஆறு சீனப் பிரஜைகளையும் கப்பல் மூலமாகக் கொழும்பிற்குக் கொண்டு சென்று குடிவரவு குடியகல்வு அதிகாரியிடம் ஒப்படைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

சில தினங்களுக்கு முன்பு யாழ். நகரப் பகுதியில் அனுமதி பெறாது மணிக்கூட்டு வியாபாரத்தில் ஈடுபட்ட ஆறு சீனப் பிரஜைகள் யாழ். சிறு குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களைக் குடிவரவு குடியகல்வு அதிகாரியிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இதனையடுத்து மேற்படி ஆறு பேரும் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இவர்கள் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டபோது சோர்ந்த நிலையில் காணப்பட்டதாகவும் உணவு உண்பதற்கு மறுத்து வந்ததையடுத்து சிறைச்சாலை ஆணையாளரினால் மேற்படி விடயம் தொடர்பாக நீதிவானுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து மேற்படி ஆறு சீனப் பிரஜைகளையும் கொழும்பிற்கு அனுப்புவதற்கான நடவடிக்கையை கப்பல் மூலமாக மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட இராணுவத் தளபதிக்கு உத்தரவிடப்பட்டதையடுத்து ஆறு சீனப் பிரஜைகளும் கப்பல் மூலமாக நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

# தேரரின் உடல்நிலை மோசமாகப் பாதிப்பு!



கொழும்பு ———

பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக சாகும் வரையிலான உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தம்பர அமில தேரரின் உடல் நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக, அவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்து வரும் மருத்துவர் சனத் ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

தேரரின் சிறு நீரகம் பாதிப்படைந்திருப்பதால் அவருக்கு நீராகாரம் அல்லது மருத்துவ சேவைகள் உடனடியாக வழங்கப்பட வேண்டும் இல்லையேல் அவரது உடல் நிலை விரைவில் மோசடைந்து விடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தம்பர அமிலதேரர் நீர் அருந்துவதை நிராகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அரசாங்கம் கவிழ்வதற்கு இடமளிக்கப்போவதில்லை!

## எல்லே குணவன்ச தேரர்

கொழும்பு ———

பல்வேறு சிரமங்களின் மத்தியில் அமைக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் கவிழ்வதற்கு இடமளிக்கப் போவதில்லையென தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இணைத்தலைவர் எல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.

மகரகம இளைஞர் சேவை மன்றத்தில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நேற்று ஏற்பாடு செய்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தனது உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

அரசாங்கத்திலிருந்து விலகிச் செல்லாமல் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கையை ஜே.வி.பி மேற்கொள்ள வேண்டும். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதை ஒரு புறம் ஒதுக்கி விட்டு, உள்நாட்டில் மோதல்களை ஏற்படுத்துவதன் மூலம் சர்வதேச சமூகத்தின் மத்தியில் இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தப்படலாமென தயான் ஜெயதிலக தெரிவித்துள்ளார். இதனால் விடுதலைப்புலிகளே நன்மையடைவாரெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரச்சினைக்குரிய இரண்டு தரப்பினரும் சுயகட்டுப்பாடுகளை விதித்துக் கொள்ளவேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் நாட்டை சர்வதேசத்தின் மத்தியில் தனிமைப்படுத்தி விடும்.

இதனை எதிர்ச் சக்திகள் நல்லதொரு சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்வர். விடுதலைப்புலிகளுக்கும் இது சாதகமாக அமையலாம். அவர்களுக்கு ஆதரவானவர்கள் நாடாளுமன்றிலுமுள்ளனர். எனவே, சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நிலைமையைத் திசை திருப்பவும் இடமுள்ளது.

சுனாமி நிவாரணசபை மாத்திரமல்லாது, இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படலாம். அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தேசத்துரோக சக்திகளின் அமைச்சரவையின் கீழ் இடம் பெறுவது மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தலாம். இறுதிச் சந்தர்ப்பத்திலாவது சம்மந்தப்பட்ட தரப்பினர் இது குறித்து சிந்திக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன் எனத் தெரிவித்தார். (தே)

## இனந்தெரியாதோரின்...

கட்டுக்காரன் குடியிருப்பு வீதியூடாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை, மறைந்திருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்திலேயே சிப்பாய் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது. காயமடைந்தவர் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளார்.

சூட்டுச்சம்பவம் இடம்பெற்ற சந்திக்கருகாமையாக அமைந்துள்ள பியர் கிராமம் கடற்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு நடத்திய தேடுதலில், மூன்று பேர் கைது செய்யப்பட்டனர் இவர்களில் ஒருவர் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டதாக தெரியவருகிறது. இதேவேளை, இந்தச் சம்பவத்திற் கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பணிமனை அறிவித்துள்ளது.

## ஆட்சிக் கவிழ்ப்பு...

பொதுக் கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி விலகப் போவதாக எச்சரித்துள்ளது. இது அந்தக் கட்சியில் அரசியல் அணுகுமுறைக்கும் அதனை விமர்சிக்கும் மூன்றாவது கட்சியான எமக்கும் அவசியமில்லை.

இந்த நிலையில் பொதுக் கட்டமைப்புத் தொடர்பில் அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி விலகி அதன் மூலம் அரசாங்கம் கவிழும் நிலைக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்காது.

ஜனாதிபதியின் பொதுக் கட்டமைப்பு விடயத்துக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் ஜே.வி.பி. அரசாங்கத்திலிருந்து விலகுமானால் நாடாளுமன்றத்தைக் கலைப்பதா? அல்லது சிறுபான்மை ஆட்சியை முன்கொண்டு செல்வதா? என ஜனாதிபதியே தீர்மானிக்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜாதிக ஹெல உறுமய...

ஆனால், சிங்கள மக்களின் அபிலாஷைகளை, விருப்பங்களை ஜாதிக ஹெல உறுமய நிறைவேற்றவில்லை என்பதாலேயே மீண்டும் சிஹல உறுமயவை உருவாக்குவோம் என்று சரத் மனமேந்திரா கூறியுள்ளதாகவும் அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் அத்துரலிய ரத்ன தேரர், சம்பிக்க ரணவக்க ஆகியோரின் நடவடிக்கைகளில் மனமேந்திரா அதிருப்தி அடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இவர்களின் நடவடிக்கை முன்னைய சிஹல உறுமய கட்சியின் செயற்பாடு களுக்கு எதிராக இருக்கிறது என்றும் சரத் மனமேந்திரா தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

## பொதுக் கட்டமைப்பை...

போன்று தனிப்பட்ட கொலைகளை நிறுத்துவதையும், துணைப் படைகளின் ஆயுதக்களைவையும், சிறுவர் ஆட்சேர்ப்பையும் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்தினதும், விடுதலைப் புலிகளினதும் பொறுப்பாகும்.

இரு தரப்பினரும் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் போர்நிறுத்தத்தை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

வடக்கு - கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் சென்றடைவதை நிச்சயப்படுத்த பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் உடன் கைச்சாத்திடவேண்டும்.

அத்துடன், சமாதானத்தை இலக்காகக் கொண்ட பேச்சுக்கள் ஊடாக சிறந்த எதிர்காலத்தை உருவாக்கலாம் என பெரும்பாலான ஆதரவாளர்கள் கருதுவதால் - சமாதான செயல்முறையில் கணிசமான, உறுதியான, முன்னேற்றத்தை இணைத்தலைவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

அத்துடன், தீர்வு முயற்சியில் நோர்வேக்கும், போர்நிறுத்தக் கண்காணிப்புகளில் ஈடுபட்டிருக்கும் ஸ்கன்டிநேவிய குழுவுக்கும் இணைத் தலைவர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

பொதுக்கட்டமைப்பை விரைவாக நடைமுறைப்படுத்த முனையும் ஜனாதிபதி சந்திரிகா, அவரது அரசு, விடுதலைப் புலிகளின் ஈடுபாட்டை ஆதரிக்கும் அதேவேளை- முஸ்லிம்களின் முக்கியத்துவத்தையும் வற்புறுத்துகின்றன.

உடனடியாக இந்த உடன்பாடு கைச்சாத்திடப்படவேண்டும். இதன் மூலம் பரஸ்பர நம்பிக்கையை கட்டியெழுப்பமுடியும் என்று இந்தக் கூட்டறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## பொதுக்கட்டமைப்பு குறித்த...

கடமையாற்றும் அரச ஊழியர்கள் உட்பட ஏனைய அனைத்து தரப்பினருக்கும் அறிவுறுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

எமது பிரசார நடவடிக்கைகளில் ஏற்பட்ட தாமதத்தின் விளைவாகவே சுனாமி நிவாரண சபை தொடர்பாக மக்கள் அச்சத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் நாடு பிளவுபடவுள்ளதாகவும், விடுதலைப் புலிகளுக்கு நாட்டை தாரைவார்க்கப் போவதாகவும் பல்வேறு கருத்துக்களைக் கூறி பொதுமக்களை அச்சமடையச் செய்துள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி நாட்டைப்பாதிக்கும் எந்தவொரு செயற்திட்டத்தையும் மேற்கொள்ளாது என்பதனை உறுதியாக கூறமுடியுமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

## பொதுக்கட்டமைப்புக்கு எதிராக

ஜனாதிபதியை பதவி விலகச் செய்யக் கோரும் போராட்டத்தையும் தொடங்குவோம் என்றும் ஆர்ப்பாட்டத்தில் முழக்கம் எழுப்பப்பட்டது.

பின்னர் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் சுமார் ஏழாயிரம் பேர் பங்கேற்றனர். பௌத்த பிக்குகளும் பெரும் எண்ணிக்கையில் இந்தப் பேரணியில் பங்கேற்றனர்.

பேரணியையொட்டி பிரதான வீதி, மருதானை 2ஆம் டிவிசன், யூனியன் பிளேஸ் உள்ளிட்ட பல பகுதிகளில் வீதிகள் மூடப்பட்டதால் 4 மணிநேரம் கொழும்பில் போக்குவரத்துச் சேவைகள் முற்றாக சீர்குலைந்தன.

யோர்க் வீதி மற்றும் ஒல்கொட் வீதி ஆகியவற்றில் ஆயிரக்கணக்கான இராணுவத்தினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். ஜனாதிபதி மாளிகைக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் நுழைவதைத் தடுக்கும் வகையில் தொலைத்தொடர்பு சந்திப் பகுதி மூடப்பட்டது.

பௌத்த பிக்குமார் நடத்திய பேரணிகள் வன்முறையில் முடிந்த நிலையில் ஜே.வி.பியின் நேற்றைய பேரணி பாரியளவில் வன்முறையை ஏற்படுத்தும் என்ற அச்சம் கொழும்பில் நிலவியது.

பெரும் எண்ணிக்கையிலான பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் லிப்டன் சுற்றுவட்டம் அருகே குவிக்கப்பட்டிருந்தனர்.

இருப்பினும் எந்தவித வன்முறைகளும் இன்றி ஜே.வி.பியின் கண்டனப் பேரணி முடிவடைந்தது.

இந்தப் பேரணியின் முடிவில் உரையாற்றிய ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா பொதுக்கட்டமைப்பு யோசனையை இன்று நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் அரசாங்கம் விலக்கிக் கொள்ளாவிட்டால், அரசிலிருந்து விலகிக்கொள்ளும் எமது அறிவிப்பில் எவ்வித மாற்றமும் இல்லை.

பொதுக்கட்டமைப்பு அமைக்கப்பட்டால், நாடு பிளவுபடும். ஜே.வி.பியைப் பொறுத்தவரையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இறுதி முன்னணியாக இருக்கப்போவதில்லை.

ஜனாதிபதியின் பொதுக்கட்டமைப்பைப் பொறுத்தவரையில் மூத்த அமைச்சர்கள் அதற்கு ஆதரவு வழங்கவில்லை. அவருக்குப் பின்னால் அனுபவமில்லாதவர்கள் இருக்கின்றார்கள். இந்தநிலையில் ஜனாதிபதிக்கு எதிராக செயற்படும் மூத்த அமைச்சர்களுடன் இணைந்து புதிய முன்னணி ஒன்றை அமைக்கவுள்ளோமெனத் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச இன்று நள்ளிரவு அரசாங்கத்தில் இருந்து விலகும் முடிவில் மாற்றமில்லை. அரசாங்கம் பொதுக் கட்டமைப்பை விலக்கிக் கொள்ள வேண்டும்.

பொதுக்கட்டமைப்பு யோசனை விலக்கிக் கொள்ளாதுவிடில், அரசாங்கத்திலிருந்து விலகிக் கொள்ளும் காலக்கெடுவையாவது நீடிக்குமாறு பொதுசன ஐக்கிய முன்னணி கோரியுள்ளதெனத் தெரிவித்தார்.

## குழப்பங்களை...

செயற்பாடுகளை மேற்கொள்வோரை தடுக்க கலவரம் அடக்கும் படைகளின் அதிகாரிகள் மற்றும் விசேட மோட்டார் படை யணி அதிகாரிகளும் தயார் நிலையில் உள்ளனர்.

சமாதான செயற்பாட்டை குழப்பும் விதமான எந்தவொரு செயற்பாட்டையும் தடுப்பதற்கான ஆலோசனைகளை பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ நேரடியாக வழங்கி வருகின்றார் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பில் இனி வரும் நாட்களில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தி பொதுமக்களினதும், அரசாங்கத்தினதும் சொத்துக்களை சேதமாக்க முனைவோரை விரட்டியடிப்பதற்கு தண்ணீர் பாய்ச்சியடிக்கும் பத்து பவுஸர்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

## கண்ணீர் அஞ்சலி

எமது பீடத்தின் அன்பு வருகைப் பேராசிரியர்
வைத்திலிங்கம் அருள்நந்தியின்
தாயார்

### திருமதி வைத்திலிங்கம் பாக்கியலட்சுமி

அவர்களின் மறைவையிட்டு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களை அவரின் குடும்பத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்,
விவசாய பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(சி-4202)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.06.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.